பக்கங்கள்
24


# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 21 ஏப்ரல் 2018 | விதி : 97



**பதவி வேட்டையில் பலியாகும் கொள்கைகள்**



**விதியே தமிழ் சாதியை என்ன செய்ய நினைத்தாயோ?**




**இறப்பைத் தடுக்கும் தாய்ப்பால்**



**ஏழாலை**




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



படம் இயக்குவதை குறைத்துக் கொண்டு நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார் சமுத்திரக்கனி. சீனுராமசாமி இயக்கவுள்ள படத்தில் சமுத்திரக்கனி நாயகனாக நடிக்கவுள்ளார்.

இதுபற்றிய அறிவிப்பு முன்னரே வெளியாகியிருந்தது. கிராமத்துக் கதையைக் கூறும் இந்தப் படத்தில் நேர்மை மாறாதவராக நடிக்கிறாராம் சமுத்திரக்கனி.

அதுமட்டுமல்ல, அவருக்கு வசனங்கள் குறைவாக இருக்கும் என்பதுடன் ஜோடியும் இல்லையாம்.

நடிக்க வந்து 15 ஆண்டுகளைக் கடந்து விட்டார் நயன்தாரா. ஆனால் இப்போதும் முதலிடத்தை அவரே தக்க வைத்திருக்கிறார்.

தற்போது அவர் வசம் 9 படங்கள் இருக்கின்றன. தமிழில் அவர் வசம் 6 படங்கள் உள்ளன.

மலையாளப் படங்களிலும் அவர் நடிக்கவுள்ளார். இதனால் முதலிடத்தை இன்னமும் அவர் தக்க வைத்திருப்பார் என்கின்றனர் சினிமா ஆர்வலர்கள்.



இலியானாவை ரசிகர்கள் அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க மாட்டார்கள். நண்பன் படத்தில் நடித்துப் பலரின் மனதை கொள்ளை கொண்டவர்.

இவரின் ஆண் நண்பர் அண்ட்றூ நியூபோன். இவர்தான் இலியானாவின் ரொப்லெஸ், நிர்வாணப் படங்களைப் படம்பிடிப்பவர்.

அண்ட்றூவை ரகசியத் திருமணம் செய்தார் என தகவல்கள் கசிந்த நிலையில் இப்போது அவர் கர்ப்பமாக இருக்கிறார் எனக் கூறப்படுகிறது. ஆனால் இலியானா எதற்கும் பதிலளிக்கவில்லை.





இன்ஸ்டாகிராம் சமூகவலைதளத்தில் தன்னைப் பின்தொடரும் 71 இலட்சம் ரசிகர்களுக்கு முத்தத்தைப் பரிசாகக் கொடுத்துள்ளார் காஜல் அகர்வால்.

தனது ரசிகர்களுக்கு முத்தம் கொடுக்கும் படம்தான் இன்ஸ்டாகிராமில் தீயாய் பரவி வருகிறது. ஆனால் இவரை ருவிட்டரில் 16 இலட்சம் பேர்தான் பின்தொடர்கிறார்கள்.

தமிழ்த் திரையுலகினர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பல படங்கள் வெளியாகாமல் முடங்கிக் கிடக்கின்றன.

பணிப்புறக்கணிப்பு முடிந்ததும் தணிக்கை பெற்ற திகதி அடிப்படையில் படங்களை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ரஜினியின் காலா படத்துக்கு முன்பாக கமலின் விஸ்வரூபம் 2 வெளியாகவுள்ளது.

காலா ஜூன் மாதமும் விஸ்வரூபம் 2 மே இறுதியிலும் வெளியாகவுள்ளன.

பாகுபலி படம் பெரும் சா
படைத்தது அறிந்ததே. அதன்
பிரபாஸ் "சாஹோ" படத்தில்
வருகிறார்.

அடுத்த வருடம் வெளியாக
இந்தப் படம் தமிழ், தெலுங்கு
ஹிந்தியில் தயாராகிறது. இதன
உரிமையை பிரபல நிறுவனம்
இந்திய ரூபாவுக்கும் மேலாகக்
வாங்கியுள்ளது. ஆனால் படத்
மொத்த செலவே 200 கோடித



# போர் தேசத்தின் ஆஷிபாக்கள்

- நோக்கன் -






ஆஷிபா பகர்வால்...

இந்தப் பூமியின் ஒரு கோடியில் ஈவிரக்கமின்றி கசக்கி வீசப்பட்ட இன்னொரு பெண் குழந்தை. மூன்று வருடங்களுக்கு முன்னர் இதேபோன்று சின்னாபின்னமாக்கப்பட்ட வித்தியா பற்றிய நினைவுகளைத் தட்டி எழுப்புகிறாள். இந்தச் சம்பவம் காம இச்சையால் தூண்டப்பட்டுத் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தத் தெரியாத காட்டுமிராண்டிகள் எல்லாம் ஒரு வர்க்கத்திற்குட்பட்டவர்கள் என்பதை நிரூபித்துள்ளன.

உலகில் அதிகபட்ச வன்முறையாளர்களாக பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களைத்தான் கூறமுடியும். ஒரு சமூகம் சார்ந்த வன்முறையாகக் காணும் இதற்கே அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும். பால் மணம் மாறாத - எட்டு வயது நிரம்பிய அந்த மழலையைக் கண்டதும் அவர்களுக்குக் காம இச்சை மேலோங்கியதாயின் அவர்களை மனித வர்க்கத்திற்குள் உட்படுத்திப் பார்க்க முடிகிறதா? வழமையாக ஒரு எட்டு வயதுச் சிறுவனையோ அல்லது சிறுமியையோ பார்க்கும்போது எமது மனதில் எழுவதும், அவர்களிடம் நாம் வினவுவதும் என்ன? உனது பெயர் என்ன? என்ன படிக்கிறாய்? உன் அப்பா பெயர் என்ன? உனது அம்மா பெயர் என்ன? தம்பி, தங்கைகள்... என்ற விவரங்களுடன் அவர்களுடனான சம்பாஷணையைத் தொடங்குவோம்.. இல்லையா?

அதைவிட்டு ஒரு வக்கிரத்தின் வடிகாலாய் அவர்களை உபயோகிப்பதற்கு மனம் உந்துமாயின் - விலங்கும் செய்யத் துணியாததை செய்தவர்களை என்ன வகைக்குள் அடக்குவது. இந்த மனித விலங்குகள் பற்றியும், காஷ்மீரில் பல வருடங்களாக நடந்து கொண்டிருக்கும் போரால் ஏற்பட்டிருக்கும் மனித உளவியல் மாற்றங்களையும் கணக்கிட வேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்கிறோம்.

நாடு பிளவுபடக்கூடாது, உரிமைகளைக் கொடுத்துவிடக் கூடாது என்ற எண்ணத்தை மட்டும் கொண்டு நடத்தப்படுகின்ற ஒரு நீண்ட போர் ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை ஓர் ஆஷிபாவின் மரணம் எமக்கு நன்குணர்த்துகிறது. இது கடந்த காலத்தில் எமக்கு நடந்த கொடுமைகளையும் - துன் பங்களையும் - வக்கிரங்களையும் கிளறிச் சென்றுள்ளது. இதேபோல போரின்பால் அழிந்துவிட்ட மனித நேயத்தையும், சமூக உறவுகளையும், பிறரின்பால் கொள்ள வேண்டிய சமூகம் சார்ந்த சிந்தனையையும் சுட்டிக் காட்டுவது போல வித்யாவுக்கான கொடுமைகளையும், பாலியல் சித்திரவதைகளையும் குறிப்பிடலாம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளே காமுகர்களாக மாறியிருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை. ஒரு எதிர்பாராத சூழ்நிலையால் ஏற்பட்ட சம்பவம் என ஆஷிபாவின் மரணத்தை எண்ணிக் கடப்பதற்கு முடியவில்லை. திட்டமிட்டு போதை மருந்தை ஊட்டி சில தினங்களாக கோயிலுக்குள் மறைத்து வைத்துப் பலரால் கூட்டு முறையில் வன்புணரப்பட்டு முடிவில் கொலை செய்யப்பட்டிருக்கிறாள். இரையைக் கண்டதும் காகங்கள் தன் இனத்தைக் கத்திக் கத்தி அழைப்பதுபோல தமது உறவுகளைக் கூவி அழைத்து கூட்டாக இதனை நடத்தி இருப்பதாகவே செய்திகள் பதிவாகி இருக்கின்றன. இதன் பின்னணியாகச் சொல்லப்படுவது என்னவெனில், ஜம்முவிலுள்ள இந்துக்களுக்கும் காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள இஸ்லாமியர்களுக்கும் இடையில் இருக்கின்ற முரண்பாட்டின் வெளிப்பாடு எனவும் ஆஷிபாவின் மரணம் சொல்லப்படுகிறது.

ஆஷிபா பகர்வால் ஜம்மு - காஷ்மீரிலுள்ள இஸ்லாமிய பழங்குடி இனத்தைச் சேர்ந்தவள். தம்மிடம் உள்ள வளர்ப்பு மிருகங்களுடன் கோடை காலத்தை மலைப்பாங்கான இடங்களிலும், குளிர் காலத்தைத் தரையிலும் கழித்து வாழ்கின்ற நாடோடிக் குடும்பத்தில் பிறந்து பின் தற்போதைய பெற்றோர்களால் தத்தெடுக்கப்பட்டவள். பகர்வால் என்ற அந்த இஸ்லாமிய சமூகத்துக்கு ஒரு பய உணர்வைத் தோற்றுவிப்பதற்காகவே, இளைப்பாறிய வருமானவரி அதிகாரியான சஞ்சி ராம் என்பவராலேயே இந்தச் சம்பவம் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தனது வளர்ப்புக் குதிரை ஒன்று காணாமல்போகவே, அதை தேடிச் சென்ற சிறுமி ஆஷிபாவை குதிரையைக் காட்டுகிறோம் என்று சஞ்சிராமின் ஆட்களால் கூட்டிச் செல்லப்பட்டுக் காட்டில் வைத்து அவள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டாள். பின் சஞ்சி ராமின் பொறுப்பிலுள்ள கோயிலுக்குள் ஏறத்தாழ மூன்று நாட்களுக்கு மேல் அடைத்து வைத்துக் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளாள்.

ஓர் இனம் இன்னொரு இனத்தை அடக்குவதற்கான ஆயுதமாகக் கூட, இத்தகைய வன்புணர்வுகளையும், கோரக் கொலைகளையும் - மனித வேட்டையும் நடத்திக் கொள்கிறது என்பதை பல வருடங்களாகக் கண்டு கொண்டவர்கள் நாம். இலங்கை இராணுவம்தான் அப்படி என்றால், எமக்குச் சமாதானத்தைத் தேடித்தருகிறோம் என்று எமது பெயரைச் சொல்லிக் கொண்டு உள் நுழைந்த இந்திய இராணுவத்தின் உச்சகட்ட நடவடிக்கையாகக் காணப்பட்டது பெண்கள் மீதான வன்முறையே. பலாத்காரமும், வன்புணர்வும், பாலுறுப்புச் சிதைப்புகளும், வயது பேதமின்றி நடத்தப்பட்ட மானபங்கங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டு இலங்கைத் தமிழரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்திய இராணுவம் முயற்சி செய்தது. இலங்கை வரலாற்றில் மிகவும் மோசமாக நடைபெற்ற பெண்கள் மீதான வன்முறைகளென இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டவற்றையே குறிப்பிடலாம்.

வழமைபோல இலங்கையில் வித்தியாவுக்கு நடைபெற்றதைப்போலவே சட்ட நடவடிக்கைகள் ஆஷிபா மரணத்திலும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

(18ஆம் பக்கம் பார்க்க)


# கடந்தவார சமூக வலைத்தளங்களில்























இப்ப திருடுங்கடா பாரக்கலாம்!






சாப்பிடும் முன்பு இலையை சுற்றிலும் தண்ணீர் தெளிப்பது ஏன்..?
சாப்பிடும் முன்பு இலையை சுற்றிலும் தண்ணீர் தெளிப்பது சின்ன எறும்புகளோ பூச்சிகளோ நமக்குத் தெரியாமல் உணவில் விழுந்து உயிர் விடக்கூடாது என்பதற்காகவே.
சாப்பிடும் முன் இலையின் ஓரத்தில் கைப்பிடிச் சோறு/சாதம் வைப்பது உணவு தானியங்கள் விளைவிக்கும் போது நமக்குத் தெரியாமல் சின்னச்சின்ன உயிரினங்கள் (புழு,பூச்சிகள்) கொல்லப்பட்டிருக்கும், அவைகளுக்கு வைக்கப்படும் பிண்டம் தான் அந்த கைப்பிடிச் சாதம்.
அந்தக் கைப்பிடிச் சாதம் பிற உயிர்களுக்கும் உணவாக வேண்டும் என்ற உயரிய ஜீவகாருண்ய நோக்கமே.
இப்படி எல்லா உயிரினங்களையும் மதிப்பதே நம் பண்பாடு






புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## சூரியனை வீட்டுக்குள் அடைத்துவிட முடியுமா?

சூரியனை வீட்டுக்குள் அடைத்துவிட முடியுமா...? அப்படியான முயற்சியைத்தான் தாயகத் தாய் அன்னை பூபதி விடயத்தில் சிலர் அரங்கேற்றியுள்ளனர். இதற்கு தியாகத் தாயின் பிள்ளைகளில் ஒருவரும் - சில தனிப்பட்ட நலன்களை நோக்காகக் கொண்டு நினைவு தினத்துக்கு தடை விதிக்குமாறு பொலிஸில் முறைப்பாடு செய்தது மட்டுமல்லாது நிகழ்வைக் குழப்பும் விதத்திலும் நடந்துள்ளார்.

அன்னை பூபதியின் நினைவுநாள் கடந்த 19 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இந்திய வல்லாதிக்கத்தை எதிர்த்து உணவை ஒறுத்து தண்ணீரை மட்டுமே அருந்தி 31நாள்கள் உண்ணாவிரதப்போராட்டம் நடத்திய அன்னை பூபதி 1989 ஆம் ஆண்டு தாயகத் தாயாக காவியமானார். விடுதலைப் புலிகளின் காலத்தில் பேரெழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்ட அவரின் நினைவுதினம் 2009 இன் பின்னர் தடுக்கப்பட்டது. தாயகத்தில் நினைவுகூரலுக்குத் தடை ஏற்பட்ட போதும், புலம்பெயர் தேசங்களில் அன்னை நினைவுகூரப்பட்டாள்.

2015 ஆட்சி மாற்றத்தின் பின்னர், நமக்காகத் தங்களை ஒறுத்து - தியாகிகளாகி - தெய்வங்களாகிப் போன நம் மாவீரர்கள் அனைவரையும் நினைவுகூரும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. தொடர்ச்சியாக நமக்காக தியாகங்கள் புரிந்தோரின் நினைவுகூரல்கள் எழுச்சியுடன் நடத்தப்பட்டன. இதைப் பொறுக்க மாட்டாத தென்னிலங்கை இனவாதிகள் இனவாதத் தீயைக் கொளுத்திக் கொண்டனர். அரசின் உயர்மட்டத்தில் இருப்பவர்களும் - தங்களை நல்லிணக்கவாதிகளாகக் காட்டிக் கொண்டாலும் அவர்களுக்கும் தமிழ் மக்கள் மாவீரர்களை நினைவுகூர்வது புகைச்சலைக் கொடுத்தாலும், ஆட்சிக் கதிரையை தக்க வைப்பதற்காக கண்டும் காணாமல் இருந்தனர்.

ஆனாலும் அதைத் தடுக்க மறைமுகமாக என்ன செய்ய வேண்டுமோ அவற்றை அவர்கள் இம்மியும் பிசகாமல் செய்தார்கள். ஆனால் மாவீரர்களை நினைவுகூருவதில் தமிழ் மக்கள் கொண்ட உறுதிப்பாட்டால் அவை சாத்தியமாகவில்லை. இந்த நிலையில்தான் அன்னை பூபதிக்கான நினைவுகூரலைத் தடுக்க மாற்றுவழியை கையாண்டுள்ளார்கள். அதில் ஓரளவு வெற்றியும் கொண்டிருக்கிறார்கள். இதற்குப் பின்னணியாக தமிழின வரலாற்றில் துரோகிகளாகத் தங்கள் பெயர்களை ஆழப்பதித்த கருணா, பிள்ளையான் போன்றோர் இருப்பது ஊரறிந்த பரகசியம்.

அன்னை பூபதிக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கெடுத்தவர் அன்னம்மா டேவிட். இந்திய இராணுவத்தினரின் அச்சுறுத்தலால் அவரின் பிள்ளைகள் அன்னம்மா டேவிட்டை போராட்டத்தைத் தொடர விடாமல் தடுத்தனர். இதனால் அன்னை பூபதி "எனது கணவரோ, பிள்ளைகளோ கேட்டால்கூட எனக்கு சிகிச்சையளிக்கக்கூடாது." எனக் கடிதம் எழுதி வைத்துவிட்டே போராட்டத்தில் இறங்கினார். தாயகத்தின் பிள்ளைகளுக்காகத் தன் சொந்தப் பிள்ளைகளைத் தியாகம் செய்து போராட்டத்தில் ஈடுபட்ட தாயை - அவரை நினைவுகூர்வதைத் தடுக்க இப்போது சொந்தப் பிள்ளைகள் தடுக்க முனைவதை என்னவென்று சொல்வது.

பேரினவாதிகளும் - துரோக்க் கும்பல்களும் - அன்னையின் நினைவுகூரலைத் தடுக்க முனைவர்களும் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். உலகுக்கெல்லாம் ஒளி கொடுக்கும் சூரியனை தனியொருவர் தனக்கு மட்டுமே சொந்தம். வீட்டுக்குள் அடைத்து வைக்கமுடியாது. அதுபோல் பிள்ளைகளை துறந்து - தாயகத்தின் பிள்ளைகளுக்காக மரணத்தைத் தழுவிய அன்னையை எவரும் தங்களுக்கு மட்டும் என சொந்தம் கொண்டாட முடியாது... இதை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு மாவீரர்களையும் - தியாகிகளையும் நினைவுகூர பொது அமைப்புகள் உருவாக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயம்...

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# தாயகத்தின் தாயை ஒருவர் உரிமை கோரலாமா?

அன்னையர் முன்னணி சார்பில் உண்ணாவிரதமிருந்து தன்னை ஈகம் செய்த அன்னை பூபதியின் நினைவுநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இவ்வாறான போராட்டங்கள் கொச்சைப்படுத்தப்படும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர் அன்னை பூபதி. அதனால்தான்தான், மயக்கமடைய நேரிட்டாலோ, சுயநினைவிழந்தாலோ தன்னை வைத்தியாலைக்குக் கொண்டு செல்ல வேண்டாம் எனவும் தனது குடும்பத்தின் சார்பில் யாரர்வது வேண்டுகோள் விடுத்தால் அதனைக் காரணம் காட்டி இதனை நிறுத்த வேண்டாம் எனவும் தனது சொந்த முடிவின் பிரகாரமே தான் இப்போராட்டத்தில் ஈடுபடுவதாகவும் எழுத்துமூலம் வழங்கிய பின்பே உண்ணாவிரதப் போரில் ஈடுபட்டார்.

திருமதி அன்னம்மா டேவிட் அவர்களின் போராட்டத்தை முறியடிக்க இந்தியப் படையினர் செய்த திருகுதாளங்களை எல்லாம் பார்த்த பின்பே அவ்வாறான நெருக்கடியிலும் மனந் தளரமாட்டேன் என்பதை அன்னை பூபதி தெளிவாக உலகுக்கு உணர்த்தி விட்டே மாமாங்கப் பிள்ளையார் கோயில் முன்றிலில் தனது போராட்டத்தை ஆரம்பித்தார். இக்கடிதம் மூலம் தான் இனி தமிழ் மக்களுக்குச் சொந்தமானவர் என்றும் - அனைத்து அன்னையரின் சார்பிலுமே அவர்களின் பிரதிநிதியாகவே இந்த அறப்போராட்டத்தில் ஈடுபடப்போவதாக உலகுக்குச் சொன்னார்.

சட்டத்தரணி பொன். வேணுதாஸ், வண.பிதா சந்திரா பெர்னாண்டோ, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வணசிங்கா போன்ற பிரமுகர்கள் இந்தப் போராட்டத்துக்கான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். அன்னையர் முன்னணி என்ற வகையில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த அனைத்து அன்னையரும் இந்த அறப்போருக்குத் துணை நின்றனர்.

இதுவும் ஒரு வகை துறவுதான்.

"ஊரும் சதமல்ல
உற்றார் சதமல்ல
பேரும் சதமல்ல
பெண்டிர் சதமல்ல
பிள்ளைகளும் சீருஞ் சதமல்ல"

என்ற வகையில் அமைந்த இந்தப் போராட்டத்துக்கு இவரது கணவரும் ஒத்தாசையாகவே இருந்தார்.




அவ்வாறான உயர்வான உணர்வு நிலையில்தான் போராட்டம் நடத்தப்பட்டது. ஓர் அரசியற் பின்னணியில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவரல்ல அன்னை பூபதி. தியாகி திலீபனின் சாவு இந்தியப் படைகள் மனதில் எந்தச் சலனத்தையும் உண்டாக்கியிருக்கவில்லை எனத் தெரிந்த பின்னும், தான் இந்தப் பிள்ளைகளுக்கு மட்டும் அன்னையல்ல, தமிழ் கூறும் நல்லுலகின் பிரதிநிதி என்பதை உணர்த்தினார்.

மட்டக்களப்பில் மட்டுமல்ல உலகில் தமிழர் எங்கெல்லாம் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் அவர் நினைவுகூரப்படுகின்றார் என்பதை தவறான வழிகாட்டலில் இயங்கும் சகலரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்நிகழ்வுகளைக் கொச்சைப்படுத்த முயல்வோரின் கரங்களைப் பலப்படுத்த எவரும் முயலக்கூடாது என உலகத் தமிழினம் எதிர்பார்க்கிறது. எதிர்காலத்தில் அன்னையர் முன்னணியே இந்த நினைவேந்தல் நிகழ்வுகளைப் பொறுப்பேற்று நடத்த வேண்டுமென்பது காலத்தின் தேவையாகும். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் போன்றவை அரசியலுக்கப்பால் இதனைக் கொண்டு செல்ல தம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

வெற்றிக்கு சொந்தக்காரர் நிறைய தோல்வி அநாதை என்பார்கள். எது எப்படி இருந்தாலும், உணர்வை இழக்கவில்லை நாம் என்பதை உணர்த்தியுள்ளார்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள். இது தனது நோக்கை அடைய வேண்டும் - அன்னையின் புகழுக்கு மாசு கற்பிக்கும் செயலில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் அன்னையின் ஈகத்தை உலகம் எத்தகைய நிலையில் போற்றுகிறது என்பதைப் புரிய முயற்சிக்க வேண்டும்.



அன்னைபூபதி நினைவு கூரல் நிகழ்வைத் தடுக்கும் நோக்கில் அவரின் மகளும் அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவரும் சென்றிருந்த சமயம்....

# பதவி வேட்டையில் பலியாகும் கொள்கைகள்

யோக நாராயணன்

காட்டில் வேட்டையாடப் படும்போது வழமையாக மிருகங்களே பலி கொள்ளப்படுவதுண்டு. சில சமயங்களில் வேட்டையாடப் போகும் மனிதர்களும் மிருகங்களால் வேட்டை யாடப்படுவதுண்டு என்ற போதிலும் அப்படியான சம்பவங்கள் மிக அரிதாகவே இடம்பெறும். தற்போது அரசியல் களத்தில் முனைப்புப் பெற்றுள்ள பதவி வேட்டைகளில் காலங்காலமாகக் கூறப்பட்டு வந்த, பின்பற்றப்பட்டுவந்த கொள்கைகள் கூடப் பலியாகும் அவலம் இடம்பெற்றுவருகிறது. எந்தக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிறைவேற்ற பதவியின் தேவை வேண்டப்படுகிறதோ அந்தப் பதவியை அடையப் பின்பற்றப்படும் கொள்கைகளே பலியாக்கப்படுகின்றன.



ஜனநாயக அரசியலில் பதவிப் போட்டி என்பது வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து இடம்பெற்று வருவதை அவதானிக்க முடியும். இந்த வேட்டை சில சமயங்களில் தீவிரமாகவும், இன்னும் சில சந்தர்ப்பங்களில் மந்தமாகவும் இடம்பெறுவதுண்டு. இது நீறுபூத்த நெருப்பாகக் கனிந்து கொண்டு கிடந்துவிட்டு திடீரெனப் பற்றி எரிவதுண்டு. இப்படியான பதவி வேட்டையில் கூட்டமைப்புக்கள் உருவாவதுமுண்டு, இருக்கும் கூட்டமைப்புகள் உடைக்கப்படுவதுமுண்டு.

எப்படியிருந்த போதிலும் தேர்தல் காலங்களில் இந்தப் பதவி வேட்டை தீவிரமடைந்து தலைவிரித்தாடுவதுண்டு. ஜனநாயகத் தேர்தல் என்றும்-மக்கள் தாங்கள் விரும்புபவர்களை சுதந்திரமாகத் தெரிவுசெய்ய வழங்கப்படும் வாய்ப்பு எனக் கூறப்பட்டபோதிலும் இந்த வேட்டை நாட்களின்போது கொலைகள் உட்பட்ட வன்முறைகள், மிரட்டல்கள், ஆட்கடத்தல், பணப்பரிமாற்றம், மது விநியோகம் எனப் பல விதமான சட்டவிரோத நடவடிக்கைகளும் கோலோச்சத் தவறுவதில்லை.

இப்படியான முறைகேடுகள் இடம்பெற்ற போதிலும் வேட்பாளர்களோ, கட்சிகளோ சில கொள்கைகளை முன் வைத்தே போட்டியிடுவார்கள். அவற்றை நிறைவேற்ற மக்கள் ஆணையைக் கோரி நிற்பார்கள். சில கட்சிகள் பொதுக் கொள்கை அடிப்படையில் கூட்டாகப் போட்டியிடுவதுமுண்டு. சில கூட்டுகள் கொள்கை அடிப்படையில் முரண்பட்டு பிரிந்து போட்டியிடுவதுமுண்டு. எப்படியிருப்பினும் அவர்கள் தொடர்ந்து முன் வைக்கும் கொள்கைகளைப் பின்பற்றுகிறார்களோ இல்லையோ தேர்தல் களத்தில் கொள்கைகள் முன் வைக்கப்படுவது பிரதான விடயமாயிருக்கும்.

ஆனால், உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்று முடிவுகள் வெளிவந்த பின்பு அரசியல் களத்தில் இடம்பெற்றுவரும் சம்பவங்கள் கொள்கைகளை நிறைவேற்றப் பதவிகளை அல்லது பதவிகளை அடையக் கொள்கைகளை விற்பதா தமிழ் மக்களின் அரசியல் என்ற ஒரு பெரும் குழப்பத்தை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்களில் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் ஆட்சியமைக்க முடியாத நிலையும், குறைந்த ஆசனங்களைப் பெற்ற தேர்தல் காலங்களிலும் அதன் முன்பும் ஒருவரை ஒருவர் துரோகிகளெனத் திட்டித் தீர்த்த கட்சிகள் கூட்டமைத்து ஆட்சியதிகாரங்களைக் கைப்பற்றியுள்ளன. பெரும்பான்மை மக்கள் எந்தக் கொள்கைகளுக்கு வாக்களித்தார்களோ அவை நிராகரிக்கப்பட்டு கொள்கை அடிப்படையின்றிக் கூட்டுச் சேர்ந்தவர்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

பொதுவாக உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதில் தமிழ் கட்சிகள் ஆடிய பதவி வேட்டையில் அவர்கள் காலங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள் பலி கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் ஆட்சியதிகாரத்தில் எவர் இருந்தபோதிலும், தென்னிலங்கைக் கட்சிகளோ, தென்னிலங்கைக் கட்சிகளின் விசுவாசிகளாக விளங்கும் கட்சிகளோ தீர்மானிக்கும் சக்திகளாக. விளங்கப் போகின்றன.

இந்தக் கொள்கைக் கொலை நடவடிக்கையை ஆரம்பித்து வைத்த பெருமை தமிழ் அரசுக் கட்சிக்குத்தான். உள்ளூராட்சித் தேர்தல் முடிந்ததும், யாழ்ப்பாணம் பயணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் "ஆர்னோல்ட்" தான் யாழ். மாநகர மேயர் என அறிவித்தார். எனினும் அது நிறைவேற்றப்படு மானால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது ஈ.பி.டி.பியின் ஆதரவு பெறப்படவேண்டும்.

எனவே மாவை. சேனாதிராசா ஆதரவு கோரி டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டார். அவர் தொலைபேசி எடுக்கவில்லை. எனவே சித்தார்த்தனுடன் தொடர்பு கொண்டதன் அடிப்படையில் டக்ளஸிடம் தொடர்பு கொண்டு ஈ.பி.டி.பியின் ஆதரவைக் கோரினார்.

சம்பந்தன் - சுமந்திரன் ஆகியோர் மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி நிலவியபோதும், மாவை. சேனாதிராசா இளம் வயதிலிருந்து தமிழ் உணர்வாளராக விளங்கி வருபவர் என்ற அடிப்படையில் அவர் மேல் தமிழ் மக்களுக்கு நல்லபிப்பிராயம் உண்டு. துரோகிகளாகவும், போர்க் குற்றவாளிகளாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும், தமிழ் மக்களாலும் புறமொதுக்கப்பட்ட ஈ.பி.டி.பியினரிடம் மாவை வலிந்து ஆதரவு கோரியது தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ரோம சாம் ராஜ்ஜியத்தின் பேரரசர் ஜூலியஸ் சீசரைக் கொல்ல அரச பிரதானி களால் சதித்திட்டம் தீட்டப்படுகிறது. ஒரு விருந்தில் வைத்து அவரை ஒவ்வொருவரும் கத்திகளால் குத்துகின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# புதுவிதி PUTHU VITHI 100 ஆவது

இதழை முன்னிட்டு நடத்தும்

## சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

### சிறுகதை

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | : ரூ. 5,000 |
| 2ஆம் பரிசு | : ரூ. 3,000 |
| 3ஆம் பரிசு | : ரூ. 2,000 |

கையெழுத்தில் ஏ-4 தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

### கவிதை

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | : ரூ. 1,000 |
| 2ஆம் பரிசு | : ரூ. 750 |
| 3ஆம் பரிசு | : ரூ. 500 |

### கட்டுரை

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | : ரூ. 1,000 |
| 2ஆம் பரிசு | : ரூ. 750 |
| 3ஆம் பரிசு | : ரூ. 500 |

**10 சிறந்த படைப்புகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள்**

### கட்டுரைப் போட்டி

கையெழுத்தில் ஏ-4 தாளில 3 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

கட்டுரைப் போட்டி (மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம்)

### தலைப்புகள்

**க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கானது**

- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு.
- பயனுள்ள வகையில் சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்தல்.
- ஜனநாயக அரசியலின் பலமும், பலவீனமும்.

**க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கானது**

- சுற்றுச் சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்களிப்பு.
- மாணவர்களின் ஆளுமையில் விளையாட்டுக்களின் பங்கு.
- வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம்.

### போட்டிகளுக்கான விதிகள்:

- சிறுகதை, கவிதை போட்டிகளுக்கு வயதுக் கட்டுப்பாடு கிடையாது.
- மாணவர்களாயின் அதிபர் அல்லது வகுப்பு ஆசிரியரின் ஒப்பம் அவசியம்.
- ஆசிரியர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.
- புதுவிதியில் வெளியாகும் போட்டிக் கூப்பனை வெட்டி அனுப்பும் விண்ணப்பங்களுக்கு இரட்டிப் புப் பரிசு.
- பரிசு வெல்லும் மாணவர்களின் பாடசாலைக்கும் விசேட பரிசுப் பொதிகள்.

புதுவிதி **போட்டிக் கூப்பன்**

பெயர் : ..............................................................

..............................................................

முகவரி: ..............................................................

..............................................................

..............................................................

பாடசாலை: ..............................................................
(மாணவராயின்)

..............................................................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 05.05.2018**

அனுப்ப வேண்டிய முகவரி:

**புதுவிதி**
**இல. 107, இராச பாதை,**
**கோப்பாய் - திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

புதுவித

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

- வல்வை ரவி -

தொடர் 33

# ஏழாலை

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் பிரிவில், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஓர் ஊரே ஏழாலைப் பகுதியாகும். இது தமிழர் பாரம்பரியம் மிக்க ஊர்களுள் ஒன்றெனலாம். இந்த ஊரின் வடக்கு எல்லையில் தெல்லிப்பழை, கட்டுவன், குப்பிளான் ஆகிய ஊர்களும் - கிழக்கு எல்லையில் குப்பிளான், புன்னாலைக்கட்டுவன் ஆகிய ஊர்களும்- தெற்கு எல்லையில் சுன்னாகம், ஊரெழு ஆகிய ஊர்களும்- மேற்கில் மல்லாகமும் உள்ளன.

ஏழாலை என்ற ஊர் பெயருக்குப் பின்னால் பல தகவல்கள் மறைந்துள்ளன. ஏழாலையை ஏழு + ஆலை எனப் பிரித்துப் பொருள் கொள்வதுண்டு. அதாவது தோட்டக் காணிகள் நிறைந்த வளமான இடம் ஏழாலையாகும். இங்கே பொதுக் கிணறுகள் தோண்டப்பட்டு அவற்றிலிருந்து தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகின்றது. அதேவேளை இங்கு பல நன்னீர்க் கிணற்றுகளும் உள்ளன. ஒரேநேரத்தில் நீர் இறைக்கும் ஏழு இயந்திரங்கள் (மனிதவலுவால் அல்லது எருது மாடுகளால் இயக்கப்படுவது) பூட்டப்பட்ட பெருங் கிணறுகள் அந்த ஊரில் இருந்திருக்கலாம். அந்த நிலையில் (ஏழு + ஆலை) ஏழாலை என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கலாம் எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

இந்த ஊரில் சமய ரீதியி லான நம்பிக்கையின் பின்னணி யிலும் ஏழாலை என்ற பெயர் சூட்டப்பட்டிருக்கலாம் என இந்தப் பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். இங்கு புங்கடி அம்மன்கோயில், அம்பலவாணேசுவரர் கோயில், அத்தியடிப் பிள்ளையார் கோயில், அத்தியடி முருகமூர்த்தி கோயில், பெரியதம்பிரான் கோயில், வீரபத்திரர் கோயில், வைரவர் கோயில் என ஏழு கோயில்கள் அமைந்துள்ளன. இந்த ஏழு ஆலயங்களும் ஒரே சூழலில் இருந்தமையால் ஏழாலயம் என்ற பெயர் வழங்கப்பட்டு, பின்னர் அது மருவி ஏழாலை என நிலை பெற்றுக்கொண்டதாகக் கூறுவோரும் உள்ளனர்.

மேலும் ஏழாலை என்பதை ஏர் + ஆலை எனப் பிரித்தும் இன்னொரு வகையில் பொருள் கொள்ளப்படுகின்றது. ஏர் + ஏழ் ஆகும், ஏழ் = எழுச்சி, ஆலை





= உழவுகால், ஏர் = மண்ணைக் கீழ் மேலாக எழுச்சியுறச் செய்யும் கருவி. ஏரால் உழுது பண்படுத்தப்பட்டு வளம் பெருக்கிக் குடியிருப்புக்குரிய நிறை நிலமாகத் திகழ்ந்தமையால் இப்பெயர் உருவாகியிருக்கலாம் என சிந்திக்க வேண்டியுள்ளது.


ஏழாலை பயிர் வளம் பெருகக் கூடிய நில வளம் கொண்ட தேசமாகத் திகழ்ந்திருந்தமையால் இப் பெயர் சூட்டப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஏழாலை என்பதை ஏர் + ஏழ் + ஆல் + ஐ எனப் பிரித்தும் நோக்கலாம். ஆல் = தொழிற் பெயர் விகுதி, ஐ = அசைநிலை. ஆகவே ஏழாலை என்பது உழுதல் நிகழும் இடம் என்ற பொருள் அடியாகப் பிறந்த இடப் பெயர் எனவும் கொள்ளலாம் எனப் பாலசுந்தரம் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கதே.

ஏழாலையின் நீர் வளத்துடன் தொடர்புடைய "கிணறு காவிகள்" என்ற கருத்தாடல் நிலவி வந்துள்ளது. அயலவர்களுக்கு ஏழாலையின் நீர் வளத்தையும் நில வளத்தையும் மக்களுடைய முயற்சிகளையும் பார்த்து ஒரு சிறு பொறாமை. அந்த வகையில் அயலூரார் ஒருவர் நல்ல வெயில் நேரத்தில் ஏழாலைக்கு வந்தார். கிணற்றில் நீர் பாய்ச்சிக் கொண்டு நின்ற கமக்காரர் ஒருவரிடம் தாகத்துக்கு தண்ணீர் வாங்கிக் குடித்தார்.

தண்ணீரின் சுவையில் திளைத்த அயலூர் வழி போக்கன் இந்த தண்ணீருக்கு இப்படியான சுவை எப்படி வந்தது என்று கேட்டான். நல்ல சுவையுள்ள தண்ணீரையுடைய கிணறுகளை எல்லாம் நாங்கள் காவிக் கொண்டு வந்து எங்கள் ஊரில் வைத்திருக்கிறோம் என்று பதிலளித்தார் கமக்காரர். கமக்காரரின் பேச்சை நம்பிய வழிப் போக்கன் கிணற்றைக் காவிக் கொண்டு போவதற்கு தம் ஊரவர்கள் சிலரையும் அழைத்துக் கொண்டு அன்றிரவே மண்வெட்டி, அலவாங்கு, கடப்பாரை, கயிறு முதலிய ஆயுதங்களுடன் வந்து சேர்ந்து விட்டார். வந்தவர்களுடைய சத்தம் கேட்டு விழித் தெழுந்த கமக்காரர் உண்மையை உணர்ந்து அவர்களுக்கு இரங்கி அறிவுரை கூறி ஏழாலையில் கிணறு காவிகள் என்ற பட்டப் பெயரையும் அளித்து அனுப்பிவைத்தார். இவர்கள் கட்டிய பட்டம் கால கதியில் இவர்களுக்கே வழங்கி வரவு செய்தது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெரிய ஊர்களில் ஒன்றான இந்த ஊர், ஏழாலை வடக்கு, ஏழாலை மேற்கு, ஏழாலை கிழக்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை மத்தி, ஏழாலை தென்மேற்கு என ஆறு கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட சுமார் 15 சதுர மைல் பரப்புடைய பிரதேசமாக இது காணப்படுகின்றது.





# வாரப்பலன்

### மேடம்
இந்த வாரம் பொருளாதார சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். தொழில் ரீதியான சூழ்நிலைகள் மேன்மையாக இருக்கும். தொழில் ரீதியான வருமானம் கூடும். வியாபாரிகளுக்கு நிதி நிலைமை சீராகும்.

### ரிஷபம்
உங்கள் புத்திசாதுரியமான செயற்பாடு பாராட்டு பெறும் வகையில் இருக்கும். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். கலை, இலக்கியம் மேன்மை தரும். விளையாட்டு போட்டிகள் உற்சாகம் மிகுந்திருக்கும்.

### மிதுனம்
இந்த வாரம் தன தான்ய சேர்க்கை. பக்தி பெருகி மனம் நிறைவாக இருக்கும். செய்யும் தொழிலில் நல்ல முன்னேற்றம் இருக்கும். எதிர்பாராத செலவு வரும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபம் பெருகும்.

### கடகம்
குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். செய்யும் தொழிலில் கடின உழைப்பு இருக்கும். வியாபாரத்தில் கடின உழைப்புப் போட்டிகள் சிரமப்படுத்தும். கல்வி யாளர்கள், மாணவர்களுக்கு காரியத்தடை வரும். கடினமான சூழ்நிலை இருக்கும்.

### சிம்மம்
இந்த வாரம் தொழில் ரீதியான சூழ்நிலை முன்னேற்றமாக இருக்கும். அயனசயனபோகம் மிகுந்திருக்கும். போக்குவரத்தில் முன்னெச்சரிக்கை தேவை. வியாபாரத்தில் போட்டி இருந்தாலும் லாபம் பெருகும்.

### கன்னி
இந்த வாரம் வரவுக்கு ஏற்ப செலவுகள் இருக்கும். புதிய பொருள் சேர்க்கை, பணவரவுகள் மகிழ்ச்சி தரும். தேக ஆரோக்கியக்குறை குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதம் வரும். அனுசரிப்பது நன்மை.கடன் சுமை குறையும்.

### துலாம்
இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் லாபகரமாக இருக்கும். தேக ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலன்,உறவுகள் மேன்மை பெறும்., கடன் சுமை குறையும். புதிய பொருள் சேர்க்கை மகிழ்ச்சி தரும்.

### விருச்சிகம்
இந்த வாரம் உங்கள் பொருளாதார சூழ்நிலைகள் முன்னேற்றமாக இருக்கும். தொழில் ரீதியான முன்னேற் றங்கள் இருக்கும். வருமானம் கூடும். குடும்ப மகிழ்ச்சி, விவசாயிகள் விவசாயப் பணிகளில் ஈடுபடுவர்.

### தனுசு
இந்த வாரம் உங்கள் பொரு ளாதார சூழ்நிலை திருப்தி தரும். உறவுகள் மேம்படும். சுபகாரிய ஈடுபாடு மகிழ்ச்சி தரும். தொழில் மேன்மை, என நற்பலன்கள் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் இருக்கும். கலை இலக்கியம் மேன்மை பெறும்.

### மகரம்
இந்த வாரம் உங்கள் பொருளாதார நிலைமை கள் சுமாராக இருக்கும். பண வரவு, வசதி வாய்ப்புகளைப் பெருக்கினாலும் அதற்கேற்ப செலவினங்களும் வரும். போக்குவரத்தில் முன்னெச்சரிக்கை அவசியம் தேவை.

### கும்பம்
இந்த வாரம் உங்கள் செல் வாக்கு உயரும். தொழில் ரீதியான சூழ்நிலையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். வியா பாரத்தில் கடின உழைப்புக்கு ஏற்ற லாபம் பெருகும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கல்வியில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

### மீனம்
இந்த வாரம் குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். நிதி நிலைமை சீராகும். வியாபாரத்தில் போட்டிகள் இருந்தாலும் லாபகரமாக இருக்கும். கல்வியாளர்கள், மாணவர்களுக்கு கடினமான சூழ்நிலை இருக்கும்.



'தேசத்தின் வேர்கள்' அமைப்பால் அன்னை பூபதியின் 30ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நடத்துகின்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி நிகழ்வு மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.



கனடா 'வாழவைப்போம்' அமைப்பின் உதவி யுடன் பூநகரி நெற்பிலவு கிராமத்திலிருந்து பல் கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாண வர்களுக்கு மாதாந்த உதவித்தொகை வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.



யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன் பகுதி யில் முதியவர் ஒருவர் தனது தலைமுடியால் ஹைஏஸ் வாகனத்தை இழுத்துச் சென்று சாதனை படைத்துள்ளார்.



வடக்கில் பல வருடங்களாக தொண்டராசிரியர் களாகக் கடமையாற்றி தற்போது இடம்பெற வுள்ள நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படாதோர் நீதி கோரி பத்தரமுல்ல கல்வி அமைச்சின் முன் போராட்டம்.



அம்பாறை வீரமுனையில் சாதனையாளர்கள் கௌரவித்துப் பாராட்டப்பட்டனர். வீரமுனை நண்பர்கள் நலன்புரி அமைப்பின் தலைவர் எஸ். திருச்செலவம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.



மட்டக்களப்பு மாநகரசபை உறுப் பினர்களால் கல்லடி நாவலடி யில் உள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் நினை விடத்தில் சிரமதான நிகழ்வு ஒன்று இடம்பெற் றுள்ளது.

# ஒரு குறள்
## பலர் விளக்கங்கள்



**குறள் 124: (அடக்கமுடைமை)**

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

**1. கலைஞர் மு.கருணாநிதி உரை:**

மிக்க உறுதியுடன் காக்கப்படவேண்டியது அடக்கமாகும். அடக்கத்தைவிட ஆக்கம் தரக் கூடியது வேறொன்றும் இல்லை.

**2. மு.வரதராசனார் உரை:**

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தைவிட மேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.

**3. சாலமன் பாப்பையா உரை:**

அடக்கத்தைச் செல்வமாக எண்ணிக் காக்க. அதைக் காட்டிலும் பெரிய செல்வம் வேறு இல்லை.





முல்லாவின் நண்பர் ஒருவர் பெரிய பணக்காரர். அவர் வீட்டுக்கு முல்லா செல்லும் போதெல்லாம் பணக்காரர் தமது திரண்ட சொத்துக்களை தம் மக்களுக்கு எவ்வாறு பிரித்து உயில் எழுதி வைப்பது என்பது பற்றியே அடிக்கடி பேசிக் கொண்டிருப்பார். உயிலை எழுதுவதால் அவருக்கு சிக்கல் ஏதும் இல்லை. ஆனால் தம்முடைய செல்வச் செருக்கினை மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே யாரைக் கண்டாலும் உயிலைப் பற்றிப் பேச்செடுத்து மணிக்கணக்கில் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பார். அவருடைய பணச் செருக்கு முல்லாவுக்கு எரிச்சலாக இருக்கும். ஒரு நாள் செல்வந்தர் முல்லாவைத் தேடிக் கொண்டு முல்லாவின் வீட்டுக்கு வந்தார். அப்போது முல்லா ஒரு தாளில் ஏதோ தீவிரமாக எழுதிக் கொண்டிருப்பதை செல்வந்தர் கண்டார். "இவ்வளவு தீவிர சிந்தனையுடன் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்?" என்று செல்வந்தர் கேட்டார். "என் உயிலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறேன் தயாரித்து முடிப்பதற்குள் உயிர் போய்விடும் போலிருக்கிறது. ஒரே குழப்பம் சிக்கல்" - என்றார் முல்லா.

"நீரும் உயில் எழுதுகிறீரா? உயில் எழுதும் அளவுக்கு உம்மிடம் சொத்தோ, பணமோ ஏது? ஒன்றும் இல்லாதபோது குழப்பமும் சிக்கலும் எங்கிருந்து வந்தது?" என்று செல்வந்தர் வியப்புடன் கேட்டார். " சொத்தோ செல்வமோ இல்லாததால்தானே உயில் எழுதுவதில் சிக்கல். இல்லாத சொத்து அல்லது செல்வத்தை எவ்வாறு என் மக்களுக்குப் பிரித்துக் கொடுப்பது என்றுதான் எனக்கு விளங்கவில்லை" என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார். தம்மை மட்டம் தட்டவே முல்லா இவ்வாறு கூறுகிறார் என்று உணர்ந்த செல்வந்தர் வெட்கத்துடன் தலைகுனிந்தார்.

# அட அப்படியா?

- தேசியக் கொடியை முதன் முதலில் உருவாக்கிய நாடு டென் மார்க். 1219இல் உருவாக்கப் பட்டது.
- எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.
- ஒரு பென்சிலைக் கொண்டு 58கி. மீ. நீளமான கோடு போடலாம்.
- பாம்புகளுக்கு கேட்கும் சக்தி கிடையாது.
- நண்டுக்கு தலை கிடையாது. அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.
- வெள்ளை என்பது ஒரு நிறமில்லை. அது ஏழு வர்ணங் களின் கலவை.
- முற்றிப் பழுத்த காய்ந்த தேங்காய் மரத்திலிருந்து பகலில் விழாது. இரவில்தான் விழும்.
- நமக்கு உடல் முழுவதும் வியர்க்கும். ஆனால் நாய்க்கு நாக்கில் மட்டும் வியர்க்கும்.




## புதிரோ புதிர்

1. கீழே வரும். ஆனால் மேலே போகாது. அது என்ன?
2. அடிப்பாதை இருக்கும். ஆனால் கால் இருக்காது. அது என்ன?
3. இளமையில் உயரம். முதுமையில் கட்டை. அது என்ன?
4. கைகள் இருக்கும். ஆனால் கைதட்ட முடியாது . அது என்ன?
5. கண் உண்டு. ஆனால் பார்க்க முடியாது. அது என்ன?

## தெரிந்த பழமொழி தெரியாத விளக்கம்



கழுதைக்குத் தெரியுமா கற்பூரவாசம்! (தவறு)


கழு தைக்க தெரியுமாம் கற்பூரவாசம். (சரி)

**விளக்கம் :** கழு ஒருவகையான கோரைப்புல் அதில் தைக்கப்படும் பாயில் படுக்கும்போது நாசியில் கற்பூர வாசனை அடிக்கும். குழந்தைகளை அந்த பாயில் படுக்கப்போட்டால் பூச்சிகள் கிட்டே வராது...



## தங்க நிலா ஓடிவா...!

தங்க நிலா ஓடி வா
தவழ்ந்து தவழ்ந்து மேலே வா!
எங்கும் ஒளி பாய்ச்ச வா
பாடம் சொல்லிக் கொடுக்க வா!
கூடிக் கணக்கு போட வா
பாடிப் பாடி ஆட வா!
பரந்த முகம் காட்ட வா
கோடிப் பூக்கள் பறித்து வா
கொண்டையில் சூட்ட வா!



# ஏன்? ஏன்? ஏன்?

**ஏன் அப்பிள் துண்டுகள் வெட்டப்பட்டதும் பழுப்பு நிறமாக மாறுகின்றன?**

அப்பிள் பழத்தை வெட்டி வெளியில் வைத்தால் உயிர்க் காற்று அதன்மீது படுகிறது. அதனால் அப்பிள் விரைவாக பழுப்பு நிறத் தன்மையை அடைந்து விடுகின்றது. நீங்கள் அப்பிள் பழத்தை வெட்டி குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால், இம்மாற்றங்கள் நிகழத் தாமதமாகும்.

**விமானங்கள் எப்படிப் பறக்கின்றன?**

விமானத்தின் இறக்கைகள் காற்று அதன் மேற்பகுதியில் வேகமாகப் பயணிக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளன. காற்று வேகமாகப் பயணிக்கும்போது, அதன் அழுத்தம் குறைகின்றது. விமான இறக்கையின் மேல் பகுதியில் காற்று அழுத்தம் குறைவாகவும், கீழ்ப்பாகத்தில் அதிகமாகவும் இருக்கும். இந்தக் காற்றழுத்தத்தில் உள்ள வேறுபாடுகள் விமானத்தை மேலெழும்பச் செய்கின்றன.


# அன்பும் அருளும் அள்ளித் தருபவன் பால முருகன்

முருகன் - அழகுக் குமரன் அவனை நாளும் தரிசிக்கக் குறையொன்றும் இல்லையே..!

‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே’ என்பார்கள். தெய்வம், தன்னை அன்புடன் கொண்டாடி போற்றுபவர்களுக்கு, அவர்கள் கேட்காமலேயே, அவர்களுக்கு வேண்டியதை எல்லாம் வரமாகத் தருவது போலவே- குழந்தையும் தன்னிடம் அன்பு காட்டி கொஞ்சுபவர்க் கெல்லாம், தன்னிடமுள்ள எது ஒன்றையும் கேட்காமலேயே கொடுக்கக்கூடியது. ‘இதனால்தான் குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே’ என்று கூறியிருக்கிறார்கள்.

அந்தத் தெய்வமே குழந்தை வடிவில் இருந்து விட்டால்..? அங்கே அன்புக்கும் அருளுக்கும் பஞ்சமே இல்லை. அப்படிக் குழந்தை வடிவத்தில் நம்மால் வணங்கப் படும் தெய்வங்கள் சைவத்தில் சிவகுமாரனும், வைணவத்தில் வசுதேவ குமாரனான கண்ணனுமே ஆவர்.

அழகுக்கும் தமிழுக்கும் ஒரு வடிவமாகத் திகழ்பவர்



முருகப் பெருமான். முருகனைக் குழந்தையாக அன்பு செலுத்தி, அவன் புகழ் பாடிப் பரவசப்பட்டவர்கள் பலர்.

பேசாப் பிள்ளையாக இருந்த குமரகுருபர குழந்தையைப் பேச வைத்து, காசியின் காற்றிலும் தமிழின் இனிமை பரவவிட்ட திறம் என்ன..?

‘சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா?’ என்று கேட்டு, தமிழ் மூதாட்டி ஔவைக்கு ஞானம் புகட்டிய திறம்தான் என்ன..?

இப்படி நம் அழகன் முருகப் பெருமானின் அற்புத அருளாடல்களுக்குப் பஞ்சமே இல்லை.

பற்றுகளை அறுத்தெறிந்து, எதுவும் வேண்டாம் என்று பழனியில் ஆண்டியாக நிற்பவன் அவன்! இச்சா சக்தியான வள்ளியையும், கிரியா சக்தியான தெய்வானையையும் மணந்து, திருக்கல்யாணக் கோலத்தில் தணிகை மலையில் அருள்பவனும் அவன்தான்!

முருகன் எந்தக் கோலத்தில் இருந்தாலும், அவனைக் குழந்தையாகப் பாவித்து, பரிவுடன் அன்பு செலுத்துவதில் தமிழர்களுக்கு நிகர் அவர்கள்தான். தங்கள் மொழி காக்க வந்த தமிழ்க்கடவுள் என்பதால் நமக்கெல்லாம் முருகப் பெருமானிடம் அத்தனை அன்பு, பரிவு!

முருகப் பெருமானை, நாம் பல வடிவங்களில் வழிபடுகிறோம். நாம் எந்த வடிவில் விரும்புகிறோமோ, அந்த வடிவில் நம்மை ஆட்கொண்டு அருள்பவர் முருகக் கடவுள்.



# அல்லாஹ் கேட்கும் 5 கேள்விகள்!

ஒவ்வொரு மனிதர்களும் இறந்த பிறகு அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தப்படுவார்கள். அப்போது அவர்களிடம் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். இந்த ஐந்து கேள்விகளுக்கும் உரிய விடையை அவன் வாழும் போதே செய்திருக்க வேண்டும். அந்த கேள்விகள் என்னென்ன தெரியுமா?

1. உன் வாழ்க்கை காலத்தை எந்தெந்த பணிகளில் செலவிட்டாய்?
2. மார்க்கக் கல்வி பெற்றிருந்தால், அதன்படி நடந்து கொண்டாயா?
3. பணத்தை என்னென்ன வழிகளில் சம்பாதித்தாய்?
4. எந்தெந்த வழியில் அதைச் செலவிட்டாய்?
5. உன் உடல் உழைப்பை என்னென்ன பணிகளுக்காக கொடுத்தாய்?

முதல் கேள்விக்கு, ‘நான் அரசு ஊழியன், நான் வங்கி ஊழியன்,” என்ற பதிலெல்லாம் சொல்ல முடியாது. நீ என்னென்ன நல்ல செயல்களைச் செய்தாய் என்பது பற்றியே அங்கு பேச முடியும்.

மார்க்கக் கல்வி குறித்த அடுத்த கேள்விக்கு, மத நூல்கள் சொல்லும் நல்ல கருத்தைப் படித்தால் மட்டும் போதாது. அதைக் கடைபிடித்திருக்க வேண்டும். அவற்றை மீறி நடந்திருந்தால், தண்டனையிலிருந்து தப்ப முடியாது.

பணத்தை நல்ல வழியில் சம்பாதித்து, நல்ல வழியில் செலவழித்திருந்தால் பிழைத்தோம்.


இல்லாவிட்டால், நரகத்தில் துன்பப்பட வேண்டியதுதான். ஆண்டவனால் தரப்பட்ட இந்த உடலைக் கொண்டு நல்ல செயல்கள் எத்தனை செய்தோம் என்பதற்கும் கணக்கு வேண்டும். இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில்,நாம் ஒழுக்க மான வாழ்வை மேற்கொள்ள வேண்டும். இல்லா விட்டால், நரகத்தில் உழல வேண்டியதுதான்!

# இருவருக்கு ஊழியம் செய்யாதீர்கள்

மிகப்பெரிய செல்வந்தர் ஒருவர் வியாபாரத்துக்காக அயல்நாடுகளுக்குச் செல்லவேண்டியிருந்தது. கடற் பயணம் மேற்கொண்டு தூரதேசத்துக்குப் புறப்பட்டுப் போனார். பல நாடுகளுக்குச் சென்று வர்த்தகம் செய்யவேண்டி இருந்ததால், நீண்ட நாள்களுக்குப் பிறகே சொந்த ஊருக்கு வரும் சூழ்நிலை. அதனால், தனது சொத்துகளை எல்லாம் பராமரிக்கும் பொருட்டு ஒரு மேலாளரை நியமனம் செய்துவிட்டுக் கிளம்பினார். அவனைத் தன் ஐஸ்வர்யங்களை எல்லாம் அனுபவித்துக் கொள்ளும்படியும் கூறிச் சென்றார்.

நாள்கள் வருடங்களாக உருண்டோடின. ஒருநாள் அந்தச் செல்வந்தர் தனது பணியாட்களுடன் கப்பலில் ஊர் திரும்பினார். தன் வீட்டுக்குச் செல்வதற்குள்ளாகவே அவர் நியமித்த மேலாளர் சரியாகவே பணியாற்றவில்லை என்பதை அறிந்தார்.

அப்போது செல்வந்தர் அவனை வரவழைத்து, “உன்னைப் பற்றி நான் கேள்விப்படுபவை எல்லாம் தவறாகவே இருக்கின்றன. இதுவரை நீ என்ன செய்தாய் என்ற விவரத்தை அறிய வேண்டும். அதற்காக நான் உன்னை விசாரிக்கப் போகிறேன். உன்னிடம் நான்



ஒப்புவித்த கணக்கு வழக்குகளை எடுத்துக்கொண்டு நாளை என்னிடம் வா” - என்றார்.

உடனே அவன் நடுநடுங்கிப் போய், “நான் என்ன செய்வேன், என் எஜமானர் விசாரிப்புக்கு உட்படுத்தியுள்ளாரே... நான் என்ன செய்வேன்... என்னை இந்த ஐஸ்வர்யமிக்க வாழ்க்கையிலிருந்து புறம்பே தள்ளிவிடுவாரோ?’ என பயந்து போனான்.

உடனே அவசர அவசரமாக தன் எஜமானரிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவராக வரவழைத்து பேசலானான். முதலாவது வந்தவரிடம், “நீங்கள் என் எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு?” என்று கேட்டான்.

“நூறுகுடம் எண்ணெய்.”

“நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று எழுதி சீக்கிரம் கடனை அடைத்துவிடு.”

பிறகு வேறொருவனை நோக்கி, “நீ பட்ட கடன் எவ்வளவு?” என்று கேட்டான்.

“நூறு கலம் கோதுமை.”

“நீ உன் சீட்டை வாங்கி, எண்பது என்று எழுது.” இப்படி ஒரு வகையாக ஒவ்வொரு கணக்கையும் முடித்து சீர் செய்ய ஆரம்பித்தான். இதை எஜமானர் கவனித்தார். அசட்டையாகவும் அநீதியாகவும் இருந்த மேலாளருக்கு இப்போதாவது புத்தி வந்ததே என அவனை மெச்சிக்கொண்டார்.

இந்தக் கதையின் வாயிலாக எஜமானராகக் கடவுளையும் சகல ஐஸ்வர்யங்களாக பூமியையும் அதன் வளங்களையும் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

அவர் மேலும் சொல்கிறார்..

“ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும், இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மை உள்ளவனாயிருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதி உள்ளவனாயிருக்கிறான்.

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டை பண்ணுவான். தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களாலே கூடாது என்று கூறி முடிக்கிறார்.

■ பகலவன்

# விதியே விதியே தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்

எவ்வளவு திறமையான வைத்தியரானாலும் உள்ளூரில் அவரைப் பொதுவாக எவரும் கண்டுகொள்வதில்லை. தாமதமாகத்தான் அவரது புகழை, திறமையை உணர்ந்து கொள்வர். வத்திக்கானுக்குக் கடைசியாகப் போவது ரோம் நகரத்தான்தான் என்று சொல்வர். சுப்பிரமணிய பாரதியாரை 'மகாகவி' என முதன் முதல் இனங்கண்டவர் எமது கிழக்கு மாகாணத்தின் சுவாமி விபுலானந்த அடிகளே!

ஒரு நிகழ்வில் பாரதியாரை மகாகவி என விபுலானந்த அடிகள் குறிப்பிட்டதும் சீறியெழுந்தார் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி. "கங்கையும் காவிரியும் இந்தியாவில்தான் உள்ளன. அதற்காக புனித கங்கைக்கு ஈடாகிவிடாது காவிரி. அது போலத்தான் மகாகவி என்ற தகுதியும். இந்தியாவைப் பொறுத்தவரை மகாகவி என்றால் அது ரவீந்திர நாத் தாகூர் மட்டுமே" என்றார். இதற்குச் சுவாமி விபுலானந்தர் "இந்த விடயத்துக்குக் காலம்தான் பதில் சொல்லும்" எனக் கூறி அந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

பாரதியாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோர் எண்ணிக்கை 13. அதிலும் ஒருவர் பாரதியாருக்குக் கடன் கொடுத்தவர். அந்தக் கடனுக்காக பாரதியாரின் இடுப்பிலிருந்த

இவரது கையைப் பிடித்தார். கடும்பசியில் அலைந்துகொண்டிருந்த இவருக்கு எந்தப் பாத்திரமானாலும் சரி என்ற நிலையில் இருந்தார். எனவே அவரின் அழைப்பை ஏற்றுத் தயாரிப்பாளரின் வீட்டுக்குச் சென்றார்.

கதவைத் தட்டியதும் திறந்தது தயாரிப்பாளரின் மனைவி. இவரைக் கண்டதும் மயக்கம் போடாத குறையாக பிரமை பிடித்தவர்போல் நின்றார். பேச்சே வரவில்லை. இருவரும் உள்ளே நுழைந்ததும் அங்கே இருந்த தயாரிப்பாளர் தனது உதவி இயக்குநரிடம் "ஏன்யா ! பேயா நடிக்க ஒரு ஆளைத்தானே கொண்டுவரச் சொன்னேன். நீ பேயையே கொண்டு வந்து விட்டாயே" எனக் கேட்டார்.

சிலர் தமது முயற்சிக்காக இவரை அணுகினர். இவருக்கு அவர்கள் யாரெனத் தெரியாது. ஒரு திரைப்படத்தில் நடிக்க வேண்டும். ஜமீன்தார் பாத்திரம் உங்களுக்கு. இங்கிருந்தே ஒப்பனையுடன் சென்று படப்பிடிப்பில் கலந்துகொள்ள வேண்டும் என்றனர். இவரும் சம்மதித்தார். இவரது பருத்த சரீரம் ஜமீன்தார் பாத்திரத்துக்குப் பொருத்தமானதுதான். ஆடம்பரமான மோட்டார் வண்டியில் ஜமீன்தாரும் அவரது உதவியாளர்களும் போல சோதனைச் சாவடியைக் கடந்து சென்றனர் அவர்கள். காரில் வி.ஐ.பி. என்ற ஸ்ரிக்கரும் ஒட்டியிருந்தது. சோதனைச் சாவடியைக் கடந்ததும் இன்று படப்பிடிப்பு இரத்துச்


மகாகவி பாரதியார்


விஜயேந்திரன்


சொர்ணலிங்கம்



வெள்ளியிலான அரைஞாண் கயிறை அறுப்பதற்காக மயானம் வரை சென்றவர். இந்த விடயம் தொடர்பாக அவரது குடும்பத்தினரும் ஊர்ப் பெரியவர்களும் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தனர். மற்றொருவர் சகோதரி நிவேதிதா எனப் பெயர் சூட்டிக் கொண்ட ஆங்கிலேயப் பெண்மணி. (முன்னாள் விடுதலைப் போராளி ஸ்ரீஅரவிந்தரின் ஆச்சிரமத்தில் இருந்த இவரைச் சந்தித்த பின்தான் பெண்ணடிமைத்தனத்துக்கு எதிரான கருத்துக்களை பாரதியார் எழுதினார்) இதுதான் அன்றைய நிலையில் பாரதியாரைப் பற்றிய இந்திய மக்களின் புரிதல்.

விபுலானந்தரின் கூற்றைக் காலம் நிரூபித்தது. கல்கியும் தான் அவசரப்பட்டுச் சொன்ன வார்த்தைகள் தொடர்பாக மனம் வருந்தினார். எட்டயபுரத்தில் அமைக்கப்பெற்ற பாரதியாரின் மணி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

● ● ●

சிலோன் விஜேந்திரன் என்றொரு நடிகர் இருந்தார். "ஆசுகவி" எனப் புகழ் பெற்ற கல்லடி வேலன் என்பவரின் பேரன் இவர். இவரது முகம் பார்க்கப் பயங்கரமானதாக இருக்கும். கண்கள் இரத்தச் சிவப்பு. ரஜனிகாந்தின் பொல்லாதவன் படத்தில் எழுத்தோட்டத்தின் போது வித்தியாசமான பார்வையுடன் இரு கண்களைக் காட்டுவர். அவை ரஜனியுடையவை அல்ல . இவருடையதே. பைலட் பிரேம்நாத் படத்தில் சிவாஜியுடன் நடித்திருந்தார்.

மந்திரதந்திரம் தொடர்பான பேய்ப் படங்கள் தெலுங்கில் வெளியாவதுண்டு ஸ்ரீதேவி பிரதான பாத்திரம் ஏற்று நடித்த "பாலநாகம்மா" எனும் படத்தில் பேயின் பாத்திரம் ஏற்று நடிக்க ஒருவர் தேவைப்பட்டார். பொருத்தமான ஒருவரைத் தேடி உதவி இயக்குநர் அலைந்துகொண்டிருந்தார். அவரது கண்களில் இவர் தென்பட்டார். ஓடோடிச் சென்று

தொடர்ந்து தமிழ், மலையாளம், தெலுங்கு திரைப்படங்களில் வாய்ப்புகள் கிடைத்தன. ஏழாவது இராத்திரி என்ற மலையாளப் படத்தில் நடித்தமைக்காக கேரள அரசினதும் தேசிய அளவிலும் விருதுகள் கிடைத்தன. அக்கால கட்டத்தில் இவர் தனது அன்னைக்கு எழுதிய கடிதத்தில் "என்னை ஏனம்மா இவ்வளவு அசிங்கமாகப் பெற்றாய். நான் பிறந்தபோதே என்னைக் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கலாமே என்று உங்களை நான் பேசியதுண்டு நீங்கள் என்னை அழகாகப் படைத்திருந்தால் நான் பட்டினியாகச் சாக நேரிட்டிருக்கும் எவனுமே என்னைத் திரும்பிப் பார்த்திருக்க மாட்டான். எனது முகம்தான் இன்று எனக்கு பலமாக உள்ளது." என்று குறிப்பிட்டிருந்தார்.

அந்தளவுக்குத் திரைப்பட வாய்ப்புக்கள் இவருக்கு கிடைத்தன. இவரைக் காதலித்து மணந்தார் ஒரு பெண். இவரது அக அழகை உணர்ந்த அந்தப் பெண்ணுக்கு முக அழகு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. சென்னை திருவல்லிக்கேணியில் மண்டபம் ஒன்றில் நடந்த திருமண வைபவம் ஒன்றில் இவர் கலந்துகொண்டிருந்தார். அங்கே ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இல்வாழ்வைத் தொடங்கும் போது தீயை சாட்சியாக வைத்து ஓம குண்டத்தின் முன் அமரவில்லை. வாழ்வை முடிக்கும்போது தீயே சாட்சியாகவும் எமனாகவும் நின்றது. இவரது மனைவி ஒரு முஸ்லிம் பெண். இருவருமே தமது சுயத்தை இழக்காமல் அவரவர் மதத்தைப் பின்பற்றி வாழ்ந்து முடித்து விட்டனர்.

ராஜீவ் காந்தியின் மரணத்தைத் தொடர்ந்து இக்கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படுவோர் தமிழ்நாட்டில் இருந்து பெங்களூருக்குத் தப்பிச் சென்றனர். அவர்களில்

செய்யப்பட்டுள்ளது எனக்கூறித் தாராளமாகப் பணமும் கொடுத்து அனுப்பினர். சில நாட்களின் பின் அப்பாவியான இவரும் கைதாக நேர்ந்தது. மல்லிகையில் கடும் சித்திரவதை. இறுதியில் இவரை எச்சரித்து விடுவித்தனர். "நடிப்புக்காக இவ்வளவு காலமும் பணம் வாங்கினேன். உதை வாங்கியது இப்போதுதான்" என வெளியில் வந்ததும் சிரித்தபடி கூறினார் இவர்.

முன்னதாக இந்தியாவில் இவர் மேற்கொண்ட ஆய்வொன்றுக்காக இவருக்கு டாக்டர் பட்டம் கிடைத்தது. கம்பதாசன் என்ற பாடல் ஆசிரியரைப் பற்றிய ஆய்வுக்காகவே இப்பட்டம் வழங்கப்பட்டது. அதுவரை கம்பதாசனின் புகழ் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அவர் சோஷலிசக் கருத்துக்களைக் கொண்டவர் என்பதால், ஓரங்கட்டப்பட்டார். அவரது புகழை வெளிச்சம் போட்டுக்காட்டவும் ஒரு ஈழத் தமிழன்தான் தேவைப்பட்டான். "அக்பர் திரைப்படத்தில் வெளிவந்த அத்தனை பாடல்களையும் கதை வசனத்தையும் கம்பதாசனே எழுதியிருந்தார். இந்தியில் வெளிவந்த அந்தப் படத்தின் பாத்திரங்களின் உதட்டசைவுக்கு ஏற்ற வகையில் தமிழில் பாடல்கள், வசனங்கள் அமைய வேண்டியிருந்தது. அப்படி இருந்தும் இப்படத்துக்கு மேலும் மெருகூட்டும் வகையிலும், தமிழின் சுவையை வெளிப்படுத்தும் முறையிலும் இப்பாடல்கள் அமைந்திருந்தன. (காதல் கொண்டாலே பயமென்ன மற்றும் கனவு கண்ட காதல் கதை கண்ணீராச்சே என்ற பாடல்கள் உட்பட) மேலும் பல மொழி மாற்றப் படங்களுக்கு கம்பதாஸன் வசனம், பாடல்கள் எழுதியுள்ளார். எனவே இவரைப் பற்றி ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டேன். எனது முயற்சியில் கிடைத்த தகவல்கள் அவரை வெளியுலகுக்கு அடையாளம் காட்ட உதவின.


# த்தாயோ?

எனக்கும் இந்த ஆய்வுக்காக டாக்டர் பட்டம் கிடைத்தது" என்றார் அவர்.

• • •

உலகில் வானொலியில் ஒலித்த முதல் தமிழ் குரல் யாழ்ப்பாணத்தவருடையது. இந்திய வானொலி தமிழில் தனது ஒலிபரப்பை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே இலங்கையில் தமிழ் ஒலிபரப்பு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அதன் பரீட்சார்த்த ஒலிபரப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. யாருடைய குரலை முதலில் ஒலிக்க வைப்பது என்று சிந்தித்தவாறே ஏற் பட்டாளர்கள் வீதியில் வந்தனர். அப்போது நாடகத்துறையில் இவர்களுக்கு மிகவும் பரிச்சயமான ஒருவர் தென்பட்டார். "ஐயா


வைரமுத்து



சத்தியராஜ்

இங்கே வாங்கோ" எனக் கூப்பிட்டு அவரை அழைத்தனர். ஒலிவாங்கிக்கு முன்னால் நிறுத்தி "ஐயா ஒரு பாட்டு பாடுங்கோ" என்று வேண்டினர். "என்ன பாட்டுப் பாடுறது என அவர் கேட்டார். "எதெண்டாலும் ஒரு பாட்டு பாடுங்கோ" என்றனர் ஏற்பாட்டாளர்கள். எங்கே போனாலும் மனிதருக்கு முதலில் நினைவு வருவது சாப்பாடுதானே? மனிதன் முதலில் சச்சரவிட்டது , சண்டைபிடித்தது, சாப்பாட்டின் உரிமைக்காகத்தானே எனவே இந்தத் தமிழருக்கும் சாப்பாட்டின் நினைப்பு முதலில் வந்ததில் தவறில்லை.

"சோறு பச்சடி துவரம்பருப்புக் குழம்பு
சாப்பிடலாம் சாப்பிடலாம் மூக்கு முட்டச்
சாப்பிடலாம் ..... என்று தொடங்கி அந்தப் பாடல் நீண்டு சென்றது.

தமிழ் ஒலிபரப்புத்துறை வரலாற்றிலும் இடம்பிடித்த இவரது கையால் சிவாஜிகணேச னுக்கு 'கலைக்குரிசில்' என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. ஆண்டு தோறும் தினகரன் பத்திரிகை நிறுவனத்தால் விழா நடத்தப்பட்டது. ஒரு வருடம் இவ்விழா வைச் சிறப்பிக்கவென சிவாஜிகணேசன் அழைக்கப்பட்டிருந்தார். சிவாஜிக்கு விருது வழங்குவதென்றால் அதற்குத் தகுதி வாய்ந்தவர் இவரே எனத் தீர்மானித்தனர். "கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் இவ் விருதினை வழங்கிக் கௌரவிப்பார்" என அறிவிக்கப்பட்டதும் சிவாஜிகணேசன் பெரும் மகிழ்வடைந்தார்.

"நான் நாடக மேடை மூலமாகவே அறிமுக மானவன் என்ற வகையில் இவரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டுள்ளேன். தமிழகத்தின் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாஸ் சுவாமிகள் போன்ற நாடக முன்னோடிகளுக்கு நிகரானவர் இவர். இவரது கையால் சிறப்புப் பெறுவது எனக்குப் பெரும் மகிழ்ச்சி" எனக்


பிரபாகரன்

கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கி விட்டே விருதைப் பெற்றுக்கொண்டார். இதன் பின்னரே எமது நாட்டின் எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் இவரின் பெருமதியைத் தெரிந்து கொண்டனர். தொடர்ந்து கலையரசு சொர்ணலிங்கம் பற்றி அவரது வாழ்வு, கலைத்துறை அனுபவங்கள் என எழுதிக் குவித்தனர். எமது நாட்டுக் கலைஞனை எமக்கு அறிமுகப்படுத்த இந்தியாவிலிருந்து ஒரு சிவாஜிகணேசன் வரவேண்டியிருந்தது.

• • • •

கவிஞர் வைரமுத்து ஐரோப்பிய நாடொன் றுக்குப் பயணமானார். விமான நிலையத்தில் இவரை இந்தியர் என இனங்கண்ட அதிகாரி ஒருவர் 'நமஸ்தே' என வணக்கம் சொன் னார். வைரமுத்து எதுவும் சொல்லாமல் போனார். அந்த அதிகாரி "நான் உங்களுக்கு வணக்கம் சொன்னேன் நீங்கள் பதில் வணக்கம் சொல்ல வில்லையே?" என்று கேட்டார். அதற்கு "நீர் என்னுடைய மொழியில் வணக்கம் சொல்லவில்லையே சொல்லியிருந்தால் நானும் பதில் வணக்கம் சொல்லியிருப்பேன்" என்றார் வைரமுத்து.

"உங்கள் மொழி என்ன" என்று அதிகாரி கேட்க 'தமிழ்' எனப் பதிலளித்தார் இவர். உடனே அங்கிருந்து சென்ற அந்த அதிகாரி ஓரிரு நிமிடங்களில் திரும்பி வந்து "பிரபாகரன் பேசும் மொழியா உங்களுடையது?" என வினாவினார். 'ஆம்' என வைரமுத்து பதிலளிக்கவே அவரது குரலில் வணக்கம் எனச் சொல்லி ஒலிப்பதிவு செய்து கொண்டார் அந்த அதிகாரி. வணக்கம் என்று தான் சரியாகச் சொல்கிறாரா என வைரமுத்துவிடம் உறுதிப்படுத்திக்கொண்டார்.

இந் நிகழ்வு பற்றி குறிப்பிட்ட வைரமுத்து "தமிழ் நாட்டில் இத்தனை கோடித் தமிழர்கள் இருந்தும் எனது மொழியை உலகுக்கு அடையாளம் காட்ட ஒரு பிரபாகரன் தான் தேவைப்பட்டிருக்கிறார்" எனக் குறிப்பிட்டார.

விஜய் ரீ.வி. பிரபலமானவர்களின் பெயரைக் குழந்தைகளுக்குச் சூட்டுவது பற்றி நிகழ்ச்சி ஒன்றில் ஆராய்ந்தது. அதில் இலங்கையர் ஒருவரின் பெயர் மட்டுமே குறிப்பிட்டனர் இந்நிகழ்ச்சியில் பங்குபங்குபற்றியோர். அது பிரபாகரன். (இந்தியாவில் தமக்குப் பிடித்த பல்வேறு தலைவர்கள், அறிஞர்கள் பற்றியும் குறிப்பிட்டனர்)

பாகுபலி படத்தில் நடித்தமை பற்றி சத்தியராஜிடம் ஒரு நிகழ்ச்சியில் வினாவெழுப்பினர். "நிஜ வாழ்க்கையிலே நீங்கள் யாருக்குக் கட்டப்பாவாக இருக்க ஆசைப்படுறீங்க?"

இதற்கு "எங்க இனத்தில அந்தப் பழக்கமில்ல. ஒத்தைக்கு ஒத்த வாடா பாத்துக்கெல்லாம் என்கிறதான் எங்க இனம். நாங்க வந்து தலைவர் ஒப்பற்ற மாவீரன் பிரபாகரனின் வீரத்தைப் பார்த்து வளர்ந்தவர்கள். முதுகிலே குத்தி பழக்கமில்லை. நேர வாடா பாத்துக்கெல்லாம் என்று சொல்லிப் பார்த்துத்தான் பழக்கம்" என பதிலளித்தார் சத்தியராஜ். அடிமனதில் இந்த எண்ணம் இருந்ததினாலேயே திடீரெனக் கேட்ட கேள்விக்கு இப்படிப் பதிலளிக்க முடிந்துள்ளது சத்தியராஜினால்.

மாநிலங்களவை எம்.பியாக இருந்த வைகோ தனது உயிரையும் பொருட்படுத்தாமல் இலங்கை - இந்திய கடற்படைகள் இந்திய இராணுவம் என்பனவற்றின் அபாயத்துக்கு மத்தியிலும் வந்து மணலாற்றில் தலைவர் பிரபாகரனைச் சந்தித்தார். என்றால் அவரது மனதில் எப்படிப்பட்ட இடம் இருந்திருக்க வேண்டும். பழ.நெடுமாறன், கொளத்தூர்மணி, சுப்புலட்சுமி ஜெகதீசன், வீரமணி, தொல். திருமளவன் P.V.ராஜேந்திரன் (வேதாரணியம்) எனப் பல்வேறு கட்சிகளின், இயக்கங்களின், அமைப்புக்களின் முக்கிய தலைவர்கள் எல்லோரும் ஒரே ஒருவரின் விடயத்தில் மட்டுமே ஒத்த கருத்துடையவர்களாக இருந்தனர். அது பிரபாகரன்தான். புறநானூறுக்குப்பின் தமிழினம் கண்ட மாபெரும் வீரன் பிரபாகரன் என முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விஸ்வநாதம் குறிப்பிட்டிருந்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆரால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு தலைவர் இவரே. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்காக எம். ஜி.ஆரைக் கூட்டிக்கொண்டு வந்து பிரபாகரனைச் சந்திக்க வைத்தனர். ஆனால் "உன்னுடைய மக்களுக்காக நீ என்ன முடிவு எடுக்கிறாயோ அதுதான் எனது முடிவு" என்று சொன்னார் எம்.ஜி.ஆர். கருணாநிதி போல் மத்திய அரசின் கொள்கைகளே மாநில அரசின் முடிவு என்று சொல்ல எம். ஜி.ஆர். தயாராக இருக்கவில்லை. அவருக்குத் தெரியும் பிரபாகரனின் மனவுறுதி, கொள்கைப்பிடிப்பு.

சுமார் 35 ஆயிரம் வீரர்கள் பிரபாகரனையே நம்பியே மாவீரர்கள் ஆனார்கள். இதில் கரும்புலிகளும் அடக்கம். இப்படிப்பட்ட உயரிய தலைவர் குறித்து "பிரபாகரனுக்கு தேசியத் தலைவர் என்ற பட்டம் கொடுத்தது யார்? தானாகத்தானே சூட்டிக் கொண்டவர் இவர்" என்று கிண்டலடிக்கவும் ஒரு தமிழ்ப் பிறவி இருந்துள்ளார். பிரபாகரன் நடத்திய விடுதலைப் போரின் விளைவாக அரசியல் புகலிடம் பெற்றவர் இவர். போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்றிய ஆயிரக்கணக்கானோர் கோப்பை கழுவுதல், பத்திரிகை போடுதல், போன்ற பல்வேறு வேலைகளை செய்து தமது வாழ்க்கையை புலம்பெயர் தேசங்களில் ஓட்டுகின்றனர். ஆனால் வந்திறங்கியவுடனேயே இவருக்கு ஊடகத்தொழிலை ஏற்பாடு செய்து ஆயிரக்கணக்கான சுவிஸ் பிராங் வழங்கினர் புலிகள். பல்வேறு நாடுகளையும் பார்க்கும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தினர். இந்தப் பிரமுகர் நாட்டிலிருக்கும் வரை பிரபாகரனைச் சந்திக்கக்கூடிய தகுதியுள்ளவராகவோ, கிளி நொச்சியில் நடைபெற்ற பிரபாகரனின் ஊடகவியலாளர் சந்திப்பில் அனுமதிக்கக்கூடிய ஒருவராகவோ களத்திலிருந்து புலிகள் கருதி யிருக்கவில்லை. இறுதி யுத்தத்தின் முடிவின் பின்பே இக்கேள்வியை எழுப்புகிறார் . சண். தவராஜா என்ற இந்தப் பிரமுகர்.

"விதியே விதியே தமிழ்ச் சாதியை என்ன செய்ய நினைத்தாயோ? எனக்குரைப்பாயோ" என்ற பாரதியின் வரிகள் தான் ஞாபகத்தில் வருகின்றன.

பேசாமல் பத்திரிகை உலகின் சுமந்திரன் என்ற விருதை இவருக்கு வழங்கினால் என்ன? •

# புரிதல்

சிதம்பரதிருச்செந்திநாதன்



வானம் சுதந்திரமாக இருந்தது. வெளிர் நீல நிறத்தில் அதன் அழகு பிரமிப்பைத் தந்தது. எப்படி இருந்தும் என்ன பிரயோசனம்? வானம் மாத்திரம் சுதந்திரமாகவும், அழகாகவும் இருந்தால் மட்டும் போதுமா என்ற நினைப்பும் அவனுள் எழுந்தது. தலைக்கு மேலே மாமரத்தின் கிளைகளில் பசுமை பிரகாசித்தது. ஒன்றையொன்று கலைத்து வந்த இரண்டு அணில்கள், ஒரு செக்கன் நின்று அவனை விநோதமாகப் பார்த்துவிட்டு மீண்டும் பாய்ந்தன.

நல்ல காலம், சுலோசனா காணவில்லையென அவன் நினைத்தான். அவள் கண்டிருந்தால் “பார்த்தீங்களா! இந்த அணில்களும் உங்கடையாட்கள் மாதிரி என்னை விநோதமாய்ப் பார்க்குதுகள்” என்றுதான் சொல்லுவாள். அவள் சுபாவமே இப்படித்தான். எதையும் சமாளித்து அனுசரித்துப் போகும் பழக்கம் எவருக்கும் மிகவும் கஷ்டமான காரியம். மனம் மீண்டும் இயற்கையுடன் ஒன்றிப் போயிற்று. பெரிய வளவில் நெருக்கமான மரங்கள், மா, பலா, அத்தனையும் இருந்தன. ஒரு புறத்தில் வாழையும்கூட! வேண்டாம் வேண்டாமென்று பூச்செடிகளும்தான்.

தணணீர் இல்லாமல் எல்லாமே சேர்ந்துபோய், அகதிகளாய் இருக்கும் நம்மவர் போல் இருந்தன. பார்வை அப்பால் வளைந்து போயிற்று. மதிலைத் தாண்டி தூரத்தில் தெரிந்த பனை மரங்களைக் கண்கள் கௌவிக் கொண்டன. எங்கள் வாழ்க்கையின் குறியீடாகத்தான், இந்த மண்ணின் பனை இருக்கின்றது என அவன் நினைத்தான். என்ன கஷ்டம் வந்தாலும் தோற்றத்தில் என்ன தளர்ச்சி வந்துவிடப் போகின்றது? பொருளாதாரத் தடை வந்து மண்ணெண்ணையைக் காண்பதே கஷ்டமாகி, நீர் இறைப்புகளும் கனவாகி, பசுமையான பயிர்கள் எல்லாம் காய்ச்சல்காரர்கள் மாதிரி ஆன பின்னரும் கூட, பனை மரங்கள் என்ன மாதிரி உறுதியாய் நிற்கின்றன. பனைகளைப் பார்க்க அவனுக்கு, பெருமிதமும் சந்தோசமாகவும் இருந்தது. ஆனால் எத்தனை பேர் இதனை உணர்ந்து கொள்கிறார்கள்?

வேலைக்கு போகும் நேரங்களைத் தவிர, சாய்மனைக் கதிரையைக் கொண்டுவந்து இந்த மாமரத்தின் கீழ் போட்டு இயற்கையோடு ஒன்றிவிடுவது வழக்கமாகி விட்டது. வீட்டினுள் இருப்பது அவனுக்குச் சங்கடமான விடயம். என்னதான் இருந்தாலும் இருப்பது அந்நிய வீடு. எதைச் செய்வதாக இருந்தாலும் கேட்டுத் தான் செய்ய வேண்டும். வீட்டுக்காரர்களின் முகம் என்ன விதத்தில் மாறுகின்றது என்று பார்த்துப் பார்த்து... வாடகை வீடு எடுத்துக்கொண்டு போகலாம் என்றாலும் சுலோசனாவுக்குச் சம்மதமில்லை. “அக்கா கோவிப்பா. அத்தான் பேசிக் கடிதம் போடுவார்” என்றெல்லாம் சொல்லுவாள். சுலோசனாவின் அக்காவின் புருஷன், பிள்ளைகள், மூன்று பேரும் அவனும் சுலோசனாவும், இந்த வீட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்த மாதிரி, சுவிஸில் தஞ்சம் புகுந்து இருந்தார்கள். சுலோசனாவின் அக்கா இந்தப் பெரிய வீட்டில் தன்னுடைய மற்றொரு மகளுடன் சகல வசதிகளுடன் அரசோச்சிக் கொண்டிருந்தாள். வீட்டிலிருக்கும் மகள்கூட விரைவில் வெளிநாட்டு அகதியாக ஆயத்தம்.

சுலோசனாவின் அக்காவின் வசதிகளும், வெளிநாட்டு வருமானமும்தான் அக்காவின் மீது தீராத அன்பை வளர்த்திருக்க வேண்டும் என அவன் நினைப்பதுண்டு. அக்காவின் வீட்டில் இருப்பதைப் பெருமையாக சுலோசனா நினைத்தாலும் மின்சாரம் இல்லாததால், தண்ணீர் அள்ளக் கஷ்டப்படுவதை, இரவு நேரத் தில் குப்பி விளக்கில் ரீ வியின் வெறுந் திரையை தரிசிக்கும் நேரங்களிலும் அவள் படுகின்ற பாட்டை அவனால் ரசிக்க முடிவதில்லை.

கிணற்றின் உட்சுவரில் வாளி அடிபடும் சத்தம் கேட்டது. தலையைத் திருப்பினான் அவன். சுவரில் வாளி அடிக்க தண்ணீர் அள்ளுவது சுலோசனாவாகத்தான் இருக்கும். கிணற்றடியில் சிவப்பு சோட்டி தெரிந்தது. அவன் எதிர்பார்த்தபடி சுலோசனா தண்ணீர் அள்ளிக் கொண்டு இருந்தாள். அவளும் தற்செயலாக அவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் இனிமை இல்லை. சாடையான கடுமை. அவனைத் திட்டித் தீர்க்கும் கடுமை அதில் பிரதிபலித்தது. அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவள் சிரிக்கவில்லை. அவள் சிரிக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். எழுந்து கிணற்றடியை நோக்கி நடந்தான். சுலோசனா ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து வாளிக்குள் ஊற்றிவிட்டு, மறு வாளிக்காக கிணற்றின் உட்சுவரை இடித்துக் கொண்டிருந்தாள்.

“என்னப்பா?” என்றான் கிணற்றின் கட்டில் இருந்தபடி.

“ம்” என்று தான் அவள் பதில் சொன்னாள்.

“ஏனப்பா கோவிக்கிறாய்...?”

அவள் பதில் சொல்லாமலே தவித்தாள். “துலாக் கயிற்றைப் பிடிச்சுப் பிடிச்சுப் கையெல்லாம் புண்ணாப் போச்சு” என்றாள் அவள்.

“என்னப்பா செய்யிறது? இந்த நேரத்தில என்ன செய்ய லாம்? இந்தப் பிரச்சினை எங்க ளுக்கு மாத்திரமே ஊரோட எல்லோருக்கும், ஏன் எல்லாத் தமிழ் சனத்துக்கும்தானே”

“நீங்கள் உங்கட சித்தாந்தத்தை உங்களோட வைச்சுக் கொள் ளுங்கோ. என்ர நெஞ்சு எரியிற எரிவு எனக்குத்தான் தெரியும்”

“நீ படுகிற கஷ்டம் உனக்கு மாத்திரம்தான் எண்டே நீ நினைக்கிறாயப்பா... எத்தனை இலட்சம் சனம் என்னென்ன மாதிரியெல்லாம் கஷ்டப்படுதுகள். அதெல்லாம் உனக்குத் தெரியாதே?.”

“தெரிஞ்சு என்ன செய்யிறது என்ர தலைவிதி” என்றாள் சுலோசனா.

தண்ணீர் அள்ளி முடிந்து வாளியை கையை விட அது ஆடுகாலில் போய் படீரென அடித்தது. அவனுக்குப் பட்டெனக் கோபம் வந்தது.

“ என்னப்பா நீ வாளியை இப்படி அடிபட விட்டால் அது நெளியாதே, இரவல் வீட்டில் வந்திருந்து கொண்டு உப்பிடிச் செய்ய அவை என்ன நினைப்பினம்?”

“இது என்ன பிறத்தியார் வீடே . அக்காவின்ர வீடுதானே. அவை ஒண்டும் பெரிசா குறை நினைக்க மாட்டா. நீங்க உங்கடை ஆக்கள் மாதிரி எங்கடை வீட்டு ஆக்களையும் நினைக்காதேயுங்கோ”

அவன் சுலோசனாவை நுட்பமாகப் பார்த்தான்.

“உன்ர ஆட்களின்ரை வீடோ, என்ரை ஆட்களின்ர வீடோ? அதுவல்ல இப்ப பிரச்சினை. இப்ப நாங்க இருக்கிறது இரவல் வீடு. அதுவும் தலைக்கு மேலால ஷெல் விழேக்க அகதியாய் ஓடி வந்து தஞ்சம் புகுந்திருக்கிறம். அதை மாத்திரம் மறந்து போகாதே.”

“அகதி எண்டு சொல்லி இஞ்சை வந்து என்ன சிரட்டைக்கையே தண்ணீர் குடிக்கிறீங்கள்? நீங்கள் அகதியாய் ஓடி வந்திட்டீங்கள் எண்டு உங்கடை ஆக்கள் வந்து என்ன வெட்டியே விழுத்தினவையள். என்ரை அக்கா இருந்த படியால்தானே, வா சுலோசனா இந்தப் பெரிய வீட்டில இருக்கலாம் எண்டு சொன்னவ-” என்றாள் பெருமிதத்துடன்!

அவன் கோபம் தணிந்திருந்தது.

“சுலோசனா நான் உன்னோட போட்டிபோட வரேல்லை. என்ர ஆட்கள் , உன்ரை ஆட்கள் எண்டு நானும் உன்னைப்போல பேய்க் கதை கதைக்க விரும்பேல்லை. ஆயிரம்தான் நீ சொன்னாலும் எங்கட சொந்த வீடு மாதிரி எதுவும் வராது.”


“ நீங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுவியள். நெடுக உப்பிடித்தானே? நீங்கள் கல்யாணம் முடிச்சு இவ்வளவு காலம் ஆச்சு. எப்பதான் அக்கா வீடு , தங்கச்சி வீடு எண்டு விட்டிருக்கிறியள்?” எனும்போதே அவள் கண்கள் கலங்கின.

1990ஆம் ஆண்டு தீபாவளி அன்று “ ஷெல்கள்” அவர்கள் இருந்த வீட்டுப் பகுதியை சுகம் விசாரிக்கத் தொடங்கின. கண் முன்னாலேயே எதிர்வீட்டு நடுக்கூரையைப் பிளந்து கொண்டு ஒரு ஷெல் விழுந்தது. சின்னத்துரைக் கிழவரும் அவரின் பேத்தி பத்மாவும், கொடூரமாக உடல் சிதறி மரணித்தார்கள். பெருங் குரலெடுத்து அழுத சுலோசனாவின்

(18ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# “பத்தாவது” வாழ்வளித்த எஜமானி



பூனைக்கு 9 வாழ்வு என்கிறார்கள். தனது வாழ்வின் கடைசிக் கட்டத்தில், சிறுநீரக் கோளாறினால் அவதிப்பட்ட தன் செல்லப் பூனைக்கு புதுச் சிறுநீரகம் பொருத்தி புதுவாழ்வு கொடுத்திருக்கிறாள் ஒரு பெண்!.

இலங்கை மதிப்பில் சுமாராக 30 இலட்சம் ரூபா இதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. இவ்வளவு பெரிய தொகையைச் செலவழிக்கும் அளவிற்கு அந்தப் பெண் வசதி படைத்தவளும் அல்ல. பத்திரிகையாளரான அவள் கணவனுக்கும் நிரந்தர வருமானம் இல்லை. வீட்டிலிருந்தபடி 3 வயதுள்ள இரட்டைக் குழந்தைகளைக் கவனித்தபடி, பத்திரிகைச் செய்தியாளராகப் பணியாற்றுபவர் இவள் கணவன். இவளுக்குள்ள பகுதி நேர வேலையிலும் பெரிதாக வருமானம் இல்லை. தன் தகுதியை மீறி, அவள் தன் செல்லப் பிராணி குணமடைய வேண்டும் என்பதற்காக இத்தனை பெரிய தொகையை அவள் செலவிட்டிருக்கிறாள்.

ஆரம்பத்தில் மிருக வைத்தியர்கள் சத்திர சிகிச்சை செய்ய அனுமதிக்கவில்லை என்றாலும், பின்பு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. மருந்தின் தாக்கம் ஆறு மாதங்கள் நீடிக்கும். அதாவது மே மாதம் பிற்பகுதி வரை இந்தக் காலக்கெடு. அதற்குள் பூனைக்கு எதுவும் நடக்கலாம் என்று மருத்துவர்கள் கூறியுள்ளார்கள். ஆறு மாதங்கள் வாழ்ந்தால் அதுவே எனக்கு பரம திருப்தியை ஏற்படுத்தி விடும் என்று கூறுகிறார் இந்தப் பெண். ஒரு வயதாளிப் பூனைக்காக இவ்வளவு பெரிய தொகையைச் செலவிட வேண்டாம், அந்தப் பணத்தை பிள்ளைகளின் படிப்பிற்காக வங்கியில் இட்டு வைக்கலாமே என்ற நெருங்கியவர்கள் பலர் பிரஸ்தாபித்திருந்த போதும், முன்வைத்த காலை பின்வைக்கவில்லை இந்தப் பெண்.

பொதுவாக 13 தொடக்கம் 17 ஆண்டுகளே பூனைகளின் ஆயுள் காலமாகும். இப்பொழுது 17 வயதைத் தொட்டிருக்கும் இந்தப் பூனை ஸ்டான்லி 25 வயதைத் தொடுமெனத் திடமாக நம்புகிறார் இந்தப் பூனையின் மீது அளவு கடந்த நேசம் வைத்திருக்கும் பெட்ஸி என்ற இந்தப் பெண்மணி.

வாயில்லா ஜீவன்களை வதைப்பவர்களும் இருக்கிறார்கள். வாயில்லா ஜீவன்கள் மீது வரையறை அற்ற அன்பு செலுத்துபவர்களும் நிறையவே இருக்கிறார்கள்.

# பயமுறுத்துவது ஏன்?




எந்த நாடு நம்புகிறதோ இல்லையோ, அமெரிக் காவை இந்த 13 திகதி நன்றாகவே பயமுறுத்தி வைத்திருக் கின்றது. இங்குள்ள பல மாடிக் கட்டடங்களில் 13 வது மாடி இல்லாதிருப்பதும், வீடுகளுக்கு 13வது இலக்கம் இடப்படாததும் சர்வசாதாரணம். இதற்குப் பல காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால் எதுவுமே முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இறுதி இராப்போசனத்தின் போது, இயேசு கிறிஸ்து உட்பட 13 பேர் மேசையில் உட்கார்ந்திருந்தனர் என்றும், இங்கேதான் யூதாஸ் கரியொத் இயேசு பிரானைக் காட்டிக் கொடுத்ததை ஒரு துர் நிகழ்வாகக் கருதுகிறார்கள். இந்த வருடம் ஏப்ரலில் வந்தது போல, வெள்ளி யும், 13 ஆம் திகதியும் ஒரேநாளில் வந்துவிட்டால், அது மகா மோசமான நாள் என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது.

முன்னைய காலத்தில், பிரிட்டனில் தூக்கிலிடப்படுபவர்கள் வெள்ளிக்கிழமைகளில்தான், தூக்கிலிடப்பட்டனர். வெள்ளியைக் கண்டு மிரள்வதற்கு இன்னொரு காரணம். குறைந்த பட்சம் ஒரு தடவையாவது, ஓர் ஆண்டில் இந்த வெள்ளியும், பதின்மூன்றும் ஜோடி சேர்ந்து கொள்கின்றன. 2020வரை, குறைந்தது இரு தடவையாவது, 13உம் வெள்ளியும், ஆண்டாண்டு அரவணைத்துக் கொள்ளுமாம். 2010 இலும் 2021இலும் ஆண்டுக்கு ஒரு தடவை மாத்திரமே இந்த ஆலிங்கனம்!

# வீட்டை அசைய வைத்த வித்தை




யானை அசைந்து கொல்லும். வீடு அசையாமல் கொல்லும் என்பார்கள். இந்த அசையாத வீட்டை அசைய வைத்த அசாத்திய துணிச்சல்காரரின் புதினந்தான் இது. தெற்கத்தைய சீனாவின் ஜியாங்ஸி என்ற பிராந்தியத்தில் தனது 3 மாடிகள் கொண்ட வீட்டை , 40 மீற்றர் தூரத்திற்கு நகர்த்தி, எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார்.

ஏன் அப்படிச் செய்திருக்கிறார்? சீனப் பணத்தில் ஒரு மில்லியன் யுவான் (சுமாராக 2 கோடியே 48 இலட்சம் இலங்கை ரூபா) செல விட்டு , பல வருடங்களாகப் பாடு பட்டு தன் கனவு வீட்டைக் கட்டி யிருந்தார். இவரின் வீடிருந்த இடம் உட்பட சில பகுதிகள் அரச நிர்மாணப் பணி காரணமாக இடித்து தரைமட்டமாக்கப்படவிருந்தன. அரசு நஷ்ட ஈட்டுத் தொகையாக 98 இலட்சம் ரூபா கொடுக்கத் தயாராக இருந்தது. தெரு நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் நிறுவனத்துடன் பேச்சு நடத்தியிருக்கிறார்.

அரசு தரும் தொகையைத் தருவதாகவும், வீட்டை உடைக்காமல் நகர்த்த முடியுமா எனவும் கேட்டதில், சாதகமான பதில் கிடைத்துள்ளது. கட்டடத்தின் கீழ் 1000 கட்டைகள் வைக்கப்பட்டு, சுமாராக 1000 தொன் எடை கொண்ட இந்த 3 மாடி வீட்டை ஒன்றரை மாதத்தில் 40 மீற்றர் தூரம் தள்ளி நகர்த்தப்பட்டது.

வீட்டை கட்டையில் ஏற்றி, கயிற்றால் இழுத்து இடம் மாற்றிய பணிக்கு, நிறுவனம் பெற்ற தொகை 54 இலட்சம் ரூபா. வீட்டின் தரைப் பகுதி யைப் புதுப்பிக்க இன்னொரு 26 இலட்சம் ரூபா தேவைப்பட்டுள்ளது. அதாவது 80 இலட்சம் ரூபாவுடன் , இலாபத்தை தரும் வழியில் வீடு முழுமையாக இடம் மாறிவிட்டதில் விவசாயிக்கு அளவுக்கு மீறிய சந்தோஷம். நஷ்டஈட்டுத் தொகையையும் அரசு 168 இலட்சம் ரூபாவாக அரசு உயர்த்தி விட்டதில் அவருக்கு இரட்டிப்பு சந்தோஷம்.!

# ஆனை விலை குதிரை விலையில் பயணச்சீட்டு



ஆனை விலை குதிரை விலை என்பார்களே... அப்படித்தான் இங்கி லாந்து, சுவிற்ஸர்லாந்து போன்ற நாடுகளில், பயணச்சீட்டுக் கட்டணம் நம்மை வெகுவாகப் பயமுறுத்துகின்றன. லண்டனுக்கு வந்த ஒருவருக்கு, இங்குள்ள பயணச்சீட்டுக்களின் விலைகளைப் பார்த்தபோது, தலையைச் சுற்றியிருக்கின்றது. லண்டனிலிருந்து, பிரிஸ்டல் என்னும் இடத்திற்கு ரயிலில் போய்வர கட்டணம் 218 பவுண்ட்ஸ் (சுமாராக 48,000 ரூபா). லண்டனுக்கும் பிரிஸ்டலுக்கும் இடைப்பட்ட தூரம் 191.3 கி.மீ. சுமாராக காரில் 2 மணி நேரப் பயணம்.

இவ்வளவு பெரிய தொகையை அநியாயமாகச் செலவழிக்க விரும்பாத 27 வயது இளைஞன், 21 வருடக் கார் ஒன்றை வாங்கி, அதற்கு காப்புறுதிக் கட்டணம் செலுத்தி, பெற்றோலும் நிரப்ப, 207 பவுண்ட்ஸ் செலவிட்டுள்ளான். காரின் விலை 80 பவுண்ட்ஸ் மாத்திரமே! ஆனால் சாலை வரி 81.38 பவுண்ட்ஸ். காப்புறுதிப் பணம் 20.43 பவுண்ட்ஸ். பெற்றோலின் விலை 25 பவுண்ட்ஸ்! ரிக்கெற் கட்டணத்தில் 10 பவுண்ட்ஸ் தொகையை மிச்சம் பிடிக்க முடிந்ததோடு, 80 பவுண்ட்ஸ் காரும் இந்தப் பயணிக்கு மிஞ்சி இருக்கின்றது.

லண்டனில் பயணக் கட்டணங்கள், நம் நாட்டில் இணையக் கட்டணங்கள் வசூலிக்கப்படும் முறைபோல, உச்ச நேரம், சாதாரண நேரமெனப் பிரிக்கப்படுவதோடு, காலை6.30 இலிருந்து 9.30 மணி, மாலையில் 4.00 மணியிலிருந்து 7.00 மணி வரை, உச்ச நேரம் என்று வரையறுத்து, கட்டணத்தை பயணிகளிடமிருந்து அதிகமாக வசூலித்து வருகிறார்கள்.

# தாய்ப்பால் கொடுத்தால் 8 இலட்சம் குழந்தைகளின் சாவைத் தடுக்கலாம்



பிறந்த குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்குத் தொடர்ச்சியாக தாய்ப்பால் கொடுத்தாலே, உலக அளவில் ஆண்டுக்கு 8.2 இலட்சம் குழந்தைகளின் இறப்பைத் தடுத்துவிடலாம் என்கிறது உலக சுகாதார நிறுவனம். அதோடு, தாய்ப்பால் கொடுப்பது தொடர்பாக தாய்மார்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் 10 அம்சங்களைக்கொண்ட வழிமுறை களையும் அறிவுறுத்தியிருக்கிறது.

குழந்தைகள் இறப்பு என்பது மிகச் சாதாரணமாகக் கடந்து போகக்கூடிய விடயமல்ல. உலகளவில் நாளொன்றுக்கு 15 ஆயிரம் குழந்தைகள் வீதம் ஆண்டுக்கு 56 இலட்சம் பச்சிளம் குழந்தைகள் இறந்துபோகிறார்கள். இலங்கையைப் பொறுத்தவரை, ஐந்து வயதுக்குட்பட்ட ஆயிரம் குழந்தைகளில் 8 குழந்தைகள் இறந்துபோகிறார்கள்.

பிறக்கும்போது இறக்கும் குழந்தைகள் மிகக்குறைவுதான். பிறந்து ஒரு மாதம் அல்லது ஒரு வருடத்தில்தான் அதிகமான குழந்தைகள் இறக்கிறார்கள். இவர்களில் கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டு இறக்கும் குழந்தைகளைவிட நிமோனியா, வயிற்றுப்போக்கு, அம்மை போன்ற தடுக்கக்கூடிய மிகச் சாதாரணமான பாதிப்புகளால் இறந்துபோகும் குழந்தைகளே அதிகம். இதேநிலை தொடர்ந்தால், 2030 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளின் இறப்பு ஆண்டுக்கு 6 கோடியாக உயரும்' என்று உலக சுகாதார நிறுவனம் (World Health Organization), யுனிசெவ் (UNICEF), உலக வங்கி (World Bank) ஆகிய அமைப்புகள் இணைந்து 2016ஆம் ஆண்டில் எடுத்த ஒர் ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

இந்தநிலையில் 'தாய்ப்பாலின் மூலமாக ஆண்டுக்கு எட்டு லட்சம் குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்ற முடியும்' என்கிற தகவல் சற்று ஆறுதலாக இருக்கிறது. இது தொடர்பாக மருத்துவர்களின் கருத்துக்கள் வருமாறு: -

'குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்துக்குள் தாய்ப்பால் கொடுத்துவிடவேண்டும். பிறந்த ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும். ஆறு மாதங்களுக்குப் பிறகு மற்ற உணவுகள் கொடுத்தாலும், தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்தி விடக் கூடாது. குறைந்தது இரண்டு வருடங்களுக்கு தாய்ப் பால் அவசியம் கொடுக்க வேண்டும்.

இது, உலக சுகாதார நிறுவனத்தால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரும் விடயம்தான். அதில் இப்போது சில திருத்தங்களைச் செய்து வெளியிட்டிருக்கிறது. அதன்படி, 'குழந்தைகளுக்குத் தாய்ப்பால்தான் கொடுக்க வேண்டும்' என்பதை அனைத்து மருத்துவமனைகளிலும் ஒரு கொள்கையாக வைத்திருக்க வேண்டும். மத்துவமனையிலிருக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள் தாய்மார்களிடம் இது குறித்து அவசியம் வலியுறுத்த வேண்டும். கர்ப்பமாக இருக்கும்போது தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்தும், வழிமுறைகள் குறித்தும் மருத்துவமனை ஊழியர்கள் விழிப்பு உணர்வு ஏற்படுத்த வேண்டும். குழந்தை பிறந்தவுடனே, தாயின் மார்பில் குழந்தையைப் படுக்கவைக்க வேண்டும். குழந்தை பிறந்து ஒரு மணி நேரத்துக்குள் அவசியம் தாய்ப்பால் கொடுத்துவிட வேண்டும். மருத்துவமனைகளில், தாயும் சேயும் எப்போதும் அருகருகேதான் இருக்க வேண்டும். தனியாகத் தொட்டிலில் குழந்தைகளைப் படுக்கவைக்கக் கூடாது. (அப்போதுதான் தாய்ப்பால் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்).


தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு தாய்ப்பால் கொடுத்து வந்தால், குழந்தையின் நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் மூளை வளர்ச்சி அதிகரிக்கும். தேவையில்லாத நோய்கள் நெருங்காது. அதற்குக் கார ணம், தாய்ப்பாலில்தான் எரிசக்தியும் புரதமும் சரியான அளவில் இருக்கின்றன. அதனால் குழந்தைகளின் உடல் வளர்ச்சி நன்றாக இருக்கும். தேவையில்லாத கொழுப்புகள் உடலில் உருவாகாது. தாய்ப்பாலுக்குப் பதிலாக மற்ற உணவுகளைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால், அவர்களின் உடலின் தேவையில்லாத கொழுப்புகள் சேரும். அதுவே உடல் பருமன், இரத்தக்குழாய்களில் கொழுப்பு அடைப்பு, சிறுநீரக பாதிப்பு, இதய பாதிப்பு போன்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். தாய்ப்பால், குழந்தைப் பருவத்தில் மட்டுமல்ல, வளர்ந்து பெரியவர்கள் ஆன பின்னரும் ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்கிறது.

குழந்தைகளுக்கு மட்டுமல்ல, கொடுக்கும் தாய்மார்களுக்கும் தாய்ப்பால் நல்லது. தாய்ப்பால் கொடுப்பதால்தான் மார்பகத்தின் வளர்ச்சி முழுமையடையும். தாய்ப்பால் கொடுக்க மறுக்கும் பெண்களின் உடலில் அது முழுமை அடையாது. செல்கள் சீராக இல்லாமல் இருப்பதால்தான் மார்பகப் புற்றுநோய் உண்டாகி றது. அதுமட்டுமல்ல, தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு உயர் இரத்த அழுத்தம் குறைகிறது. உடலிலிருக்கும் தேவையில்லாத கொழுப்புக்கள் குறைகிறது.

குழந்தைக்கு நாளொன்றுக்கு எட்டு முதல் பத்து முறை பால் கொடுக்க வேண்டும். இரண்டு முதல் மூன்று மணி நேர இடைவெளியில் பால் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கிடைக்கவேண்டியது குழந்தை யின் உரிமை அதனைக் கண்டிப்பா க் கொடுக்க வேண்டும். குழந்தை பிறந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு (மற்ற உணவுகளைக் கொடுக்க ஆரம்பித்தவுடன் ) பலர் தாய்ப்பால் கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். அது தவறு. மற்ற உணவுகள் கொடுத்தாலும், குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்காவது அவசியம் தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.

தாய்ப்பால் கொடுத்தால் அழகு குறைந்துவிடும் என்ற தவறான கருத்து நிலவிவருகிறது. கர்ப்ப காலத்தில் உடலில் தங்கும் கொழுப்புகள் தாய்ப்பால் கொடுத்தால் வேகமாகக் கரையும். கர்ப்ப காலத்துக்கு முன்னதாக இருந்த பழைய உடலமைப்பைப் பெறுவதற்கு வேறு எந்த உடற்பயிற்சியும் செய்ய வேண்டாம். தாய்ப்பால் கொடுத்தாலே போதும் என்கின்றனர் தாய் - சேய் மருத்துவர்கள்.

# பின்னோக்கி நடக்கலாமா?



நடைப் பயிற்சி அனைவராலும் செய்யமுடிந்த எளிமையான பயிற்சி. இதயம், நுரையீரலை வலுப்படுத்தவும், இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அதிகரிக்காமல் தவிர்க்கவும் நடைப் பயிற்சி மிகவும் அவசியம்.

நடைப் பயிற்சி என்றதும் முன்னோக்கி நடக்கும் பயிற்சி மட்டுமே நமக்குத் தெரியும். அதை மட்டுமே நம்மில் பெரும்பாலானோர் செய்து வருகிறோம். ஆனால், பின் னோக்கி நடந்தும் பயிற்சி செய்ய லாம் என்கிறார்கள் நிபுணர்கள்.

"முன்னோக்கி நடப்பதை விடப் பின்னோக்கி நடப்பதில் அதிக நன்மைகள் இருக்கின்றன. இது பல்வேறு ஆராய்ச்சிகளின்மூலம் கண்டறியப்பட்டுள்ளது" என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

"பின்னோக்கி நடப்பதால் நம் உடலின் சமநிலை மேம்படுகிறது. நடைப்பயிற்சியின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும். முன்னோக்கி நடப்பதை விடப் பின்னோக்கி நடக்கும்போது காலை வீசி நடக்கும் அளவு (stride length cadence) குறைவாக இருக்கும். இதனால் தசைகள் வலுவடையும். மூட்டு மற்றும் கணுக்கால் தசைகள் வலுவடையும். தொடைக்குப் பின்னால் உள்ள தசை நார்கள் சீராக இயங்க உதவும். முதுகு வலியைக் குறைக்கும். மூளையின் செயற்றிறனை (Cognitive Control) மேம்படுத்தும். உடல் எடையைக் குறைக்க உதவும். தினமும் 15 நிமிடம் வாரத்தில் நான்கு நாள்கள் நான்கு வாரம் தொடர்ந்து செய்தால் இதற்கான பயன்களை அடையலாம். சில உடல்நல பாதிப்புகள் உள்ளவர்களைத் தவிர மற்ற அனைவரும் இந்தப் பயிற்சியை மேற்கொள்ளலாம்."

நரம்புக்கோளாறு உள்ள வர்கள், முன்னோக்கி நடக்கவே சிரமப்படுபவர்கள், அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் (சில நாள்களுக்கு) பின்னோக்கி நடக்கக்கூடாது.

கவனம் அவசியம்: பின் னோக்கி நடக்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். துணைக்கு ஒருவரை வைத்துக்கொண்டு மட்டுமே இந்தப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் ஏராளமான ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

■ ஜெயராணி

22



# வயதுவந்தோர்க்கு மட்டும்

தனிப்பட்ட மற்றும் தொழில் வாழ்க்கையை மட்டும் ஒருவர் வாழ்கிறார் எனில் அவர் சுயநலவாதி. தன் வீட்டுக்கு வெளியே என்ன நடந்தாலும் அவருக்குக் கவலை இல்லை. அசம்பாவிதம் நடந்தால் இன்னும் இரண்டு பூட்டுகளை வாங்கி வீட்டைப் பூட்டிவிட்டு உள்ளே அமர்ந்துகொள்வார். அப்படித்தான் நாம் எல்லோரும் வீதி சரியில்லை என்றால் றூட்டை மாற்றப் பழகிக்கொண்டோம். பொதுப் போக்குவரத்து நெரிசலானதும் தனியாக வாகனம் வைத்துக் கொள்ளத் தயாரானோம். பொதுக் குடிதண்ணீர் விநியோகம் பிரச்சினை ஆனதும் காசு கொடுத்து தண்ணீர் கான்களை வாங்கத் துணிந்தோம். குளம், ஆறுகளை அழிக்க ஏன் அனுமதித்தோம் எனில் அவை பொதுப் பயன்பாட்டிற்கானவை. நமக்கே நமக்கான ஒரு சதுர அடியில்கூட சமரசம் செய்துகொள்ளாத நாம், நம் இயற்கை வளங்கள் அனைத்தையும் சூறையாட விட்டோம். ஏனென்றால், அவற்றால் நமக்கு நேரடியான இலாபங்கள் இல்லை.

கணினியில் உட்கார்ந்தபடி ஈட்டும் பணத்தை வைத்து நம்மால் எல்லாவற்றையும் வாங்கிவிட முடியும். வேறென்ன வேண்டும் நமக்கு? குடியிருக்கும் குளத்தின் நீரைத் தவளை குடித்துத் தீர்ப்பதில்லை. ஆனால், நாம் இந்த மண்ணில் வாழ்ந்துகொண்டே எவ்வளவு சுரண்டுகிறோம்? பொது என்ற வார்த்தையே நம் அகராதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. குழந்தைகள் என்ன பார்க்கிறார்களோ அதைத்தான் கற்றுக் கொள்கின்றனர். அவர்கள் நாம் சுயநலமாக வாழ்வதைப் பார்க்கின்றனர். அவ்வழியிலேயே நடக்கின்றனர். பெரியவர்களுக்கு சமூக வாழ்க்கை என ஒன்றே இல்லாத போது குழந்தைகளுக்கு எப்படி தன்னோடு வாழும் சக மனிதர்மீதும் தான் வாழும் இந்த பூமியின் மீதும் பற்று வரும்?! மண்ணையும் மனிதர்களையும் நேசிக்காத தலைமுறையால் யாருக்கு என்ன பயன்?

“கடைசி மரம் வெட்டிச் சாய்க்கப்படும்போது, கடைசி மீன் பிடிக்கப்பட்டுவிடும்போது, கடைசி ஆறு விஷமாக்கப்படும்போதுதான் நமக்குப் புரியும், நம்மால் பணத்தைத் தின்ன முடியாதென.”

என்னை மிகவும் பாதித்த வரிகள் இவை. இந்தச் செவ்விந்தியச் சொல்வழக்கு நமக்கான ஆதி எச்சரிக்கை. மரம், மீன், ஆறுகள், இவற்றோடு மனிதரையும் சேர்த்துக்கொள்வோம். நமக்கென இருக்கும் கடைசி மனிதரும் வெறுப்புணர்வால் கொல்லப்படும்போதுதான் நமக்கு இழப்பின் ஆழம் புரியும். மரங்கள் வெட்டப்பட்ட இடத்தில் முளைத்துக் கிடக்கும் கட்டடக் காட்டைப் பாருங்கள்! கடலில் இரசாயனக் கழிவு கலந்து, செத்துக் கரையொதுங்கும் மீன்களைப் பாருங்கள்! வாழ வேண்டிய வயதில் வெறுப்பு உணர்வாலும், பசியாலும், நோயாலும், வன்முறையாலும், நம்மைப்போன்ற மனிதர் செத்து மடிவதைப் பாருங்கள்! நாம் அழிவின் விளிம்பில் நிற்கிறோம். இது பயமுறுத்தல் அல்ல, எச்சரிக்கை.

கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் நாம் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறோம். ஆனால், இதில் மோசமான விடயம் என்னவென்றால், இந்தக் காலத்தில் சமூக சமத்துவமின்மை அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. எல்லா வகையான பாகுபாடுகளும், வன்மங்களும் கூர்மையடைகின்றன. இதில் பெற்றோர்களாகிய நமக்கு எந்தப் பங்கும் இல்லையா?

சமூக விலங்கான மனிதர்கள் சமூக வாழ்க்கையைப் புறந்தள்ளிவிட்டு சுயநலமாக வெறுமனே பிழைத்திருக்க முடியாது. இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த திம்மக்கா பாட்டியை உங்களுக்குத் தெரியுமா? வயது நூற்று சொச்சம். தான் வாழும் கிராமத்தில் பல பத்தாண்டுகளாக சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திற்கு ஆயிரம் ஆலமரங்களை நட்டு வளர்த்து பூமியைக் குளிர்வித்தவர். வெப்பம் தகித்துக்கிடந்த அந்த ஊர் இப்போது வேர் பிடித்த ஆலமரங்களால் சில்லென்று இருக்கிறது. வாழ்கிற தலைமுறை மட்டுமின்றி எதிர்காலத் தலைமுறையும் அவரை வாழ்த்தும். இதுதான் சமூக வாழ்க்கை! நம் வாரிசுகளுக்குச் சொத்து சேர்த்ததைத் தவிர, எதிர்காலத் தலைமுறைக்கென நாம் ஒரு சிறு துரும்பையாவது கிள்ளிப் போட்டிருப்போமா? நம் பிள்ளைகளும் இந்த பூமியில் தானே வாழப் போகின்றன. அந்த பூமியின் நன்மைக்கு நாம் ஏதேனும் செய்தோமா?

நாம் செய்ய வேண்டியதெல்லாம் எளிய விடயங்கள்தான். பிடுங்கப்பட்ட ஒவ்வொரு மரத்தையும் ஈடுசெய்ய ஆயிரம் விதைகளை நாம் ஊன்றியாக வேண்டும். வெறுப்பால் அழிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரிடமும் மன்னிப்பு கோரும் வகையில் மொத்த மானுட சமூகத்தையே நாம் நேசத்தால் குளிப்பாட்ட வேண்டும். வீடே கதி எனக் கிடப்பதை விட்டு, வேலை வேலை என ஓடுவதைச் சற்று நிறுத்தி உங்கள் பிள்ளைகளின் கைபிடித்து வீதிக்கு நடந்து வாருங்கள்!

கறுப்பு - சிவப்பு, ஏழை பணக்காரர், அந்த வேலை இந்த வேலை, அந்த மதம் இந்த மதம் என்ற பாகுபாடில்லாமல் அவர்கள் எல்லோருடனும் கைகுலுக்கட்டும், எல்லோரையும் மதிக்கட்டும், எல்லோரைப் பார்த்தும் புன்னகைக்கட்டும், எல்லோருடனும் பழகும்போது தான் சமத்துவத்தின் மீது குழந்தை பிடிப்பு கொள்ளும். தொலைதூரப் பயணங்கள் கூட்டிப் போங்கள். பல வகையான மொழி பேசும், வெவ்வேறு வகையான உணவுகளை உண்ணும், உடைகளை உடுத்தும் மக்களை அறிமுகம் செய்யுங்கள். எல்லோருக்கும் நம்மைப் போல நல்வாழ்க்கை வாழ உரிமையுண்டு என்பது குழந்தைக்குப் புரியும். பன்முகத் தன்மையை அங்கீகரிக்கத் தொடங்கும். குழந்தை உங்களிடமிருந்து இப்படியான விடயங்களைக் கற்கட்டும். இதுதான் சமூக வாழ்க்கை. சமூக, பொருளாதார, மத ரீதியான ஆதிக்கங்களுக்கு ஆட்படாத வாழ்க்கைக் கல்வியைக் குழந்தைக்கு அளிக்க முடியுமானால் நீங்களே சிறந்த பெற்றோர். அதுதான் உங்களின் ஆகச் சிறந்த சமூகப் பங்களிப்பு!

• • •

குழந்தை வளர்ப்பு தொடர்பான ஒரு தொடருக்கு வயது வந்தோர்க்கு மட்டும் என்று தலைப்பா? என, சில நண்பர்களும் வாசகர்களும் கேட்டனர். சொல்ல வரும் விடயத்தை இந்தத் தலைப்பு தவறாக வழிநடத்துவதாகவும் சிலர் குறிப்பிட்டனர். நம்மைப் பொறுத்தவரை வயது வந்தோருக்கு மட்டுமான விடயமெனில் அது செக்ஸ் மட்டும்தான். மற்றபடி 'எல்லாவற்றையும்' கடைவிரித்து வைக்கலாம். குழந்தைகள் ஒருபோதும் பார்க்கக் கூடாத, பழகக் கூடாத வயது வந்தோருக்கு மட்டுமான விடயங்கள் நிறைய இருக்கின்றன. வன்முறை, வன்மம், பாகுபாடு, திருட்டு, பொய் சொல்லுதல், ஏமாற்றுதல், பாலியல் சீண்டல்கள், மூட நம்பிக்கை என அந்தப் பட்டியல் மிகப் பெரியது. குழந்தையின் உளவியலைக் கட்டமைக்கும் இவை குறித்து உண்மையில் நமக்கு எந்தப் புரிதலும் இல்லை.

நம் சமூகத்தில் பல வீடுகளில் சர்வ சாதாரணமாகக் காணக் கிடைக்கிற வயது வந்தோருக்கு மட்டுமான காட்சிகள் இவை.

என் உறவினர் ஒருவருக்கு எதற்கெடுத்தாலும் “ரெண்டு விட்டேன்னா தெரியும்” என மனைவியை நோக்கிக் கையை ஓங்குவது பழக்கமாகவே இருந்தது. ரென்ஷன் ஏறினால் நடுக்கூடத்தில் போட்டு அடிக்கவும் செய்வார். மறுநாள் மனைவியிடம் வந்து ‘ரென்ஷனா’ இருக்குற நேரம் கனக்கக் கதைக்காதே என்று எத்தனை தடவை சொல்லியிருக்கேன்” என்று சமாதானம் செய்வார். இதைப் பார்த்துப்பார்த்து வளர்ந்த அவரின் மகன் 15 வயதில், ‘ஏன்டா வெளில சுத்துற” என்று கேட்ட அம்மாவை, ஓங்கி ஒரு அறைவிட்டான். கேட்டால் ‘ரென்ஷன்’ என்றான். அதைவிட, கொஞ்சம் வளர்ந்ததும் காதலித்துத் திருமணம் செய்த பெண்ணை அடிப்பதை வழக்கமாக்கிக்கொண்டான். காரணம் ரென்ஷன்.

இன்னொரு தம்பதி. இருவருமே வேலைக்குப் போய் கைநிறைய சம்பாதிப்பவர்கள். குழந்தை முன் ஒருவரை ஒருவர் கேவலமாகத் திட்டித் தீர்ப்பார்கள். மனைவிக்குப் பல ஆண்களுடன் உறவு இருப்பதாகக் கெட்ட வார்த்தைகள் சொல்லி, கணவன் திட்டுவார். “நீ மட்டும் ஒழுங்கா?” என மனைவியும் அசிங்க அசிங்கமாகப் பேசுவார். வட்ஸ்அப்பில் வந்த மெசேஜ் முதல் பாலியல் ரீதியான சம்பவங்கள் எல்லாவற்றையும் ஆத்திரத்தோடு விவரிப்பார்கள். அவர்களது எட்டு வயதுக் குழந்தை பெற்றோரின் சண்டையை அழுதுகொண்டே தடுக்கும். கூடா நட்பினால் விரிசல் விழுந்த தம்பதியருக்குப் பிள்ளையாக இருப்பதைப் போன்ற கொடுமை வேறெதுவும் இல்லை. வாழ்க்கையே அதற்கு சூனியம்தான். குழந்தை முன் சண்டை போடக்கூடாது. கெட்ட வார்த்தைகள் பேசக் கூடாது என்ற அடிப்படையான அறத்தைக்கூட இன்றைய படித்த தலைமுறை கடைப்பிடிப்பதில்லை.

(இன்னும் பேசுவோம்)

## புரிதல்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

அழுகையை நிறுத்த அவன் பெரும்பாடுபட்டான். கையில் அகப்பட்ட பொருட்களுடன் அவர்கள் சைக்கிளில் புறப்பட்டார்கள், நல்லவேளை பிள்ளைகள் இல்லாமற் போனது என்றுகூட அப்போது நினைத்தான். வாய்க்கால் வழியால் ஓடும் நீரைப்போல், சனங்கள் தங்கள் சுமைகளுடன் வீடுகளை விட்டும், கிராமங்களை விட்டும், தயக்கத்துடன் இடம்மாறிக் கொண்டிருந்தார்கள்.

தலைவிரி கோலமாக சைக்கிளில் இருந்த சுலோசனாவின் பேச்சுக்களை பொறுமையுடன் செவிமடுத்தான் அவன். "சும்மா இருக்கேலாமல் அவங்களோட முரண்டு பிடிக்கிறது. இப்ப பாருங்கோ நாங்கள் படுகிறபாட்டை..."

"ஐயோ வீடு எப்ப நாசமாய் போகுதோ? ஐயா கஷ்டப்பட்டு உழைச்சு எனக்கு ஆசையாய் கட்டித் தந்த வீடு. நான் சின்னப் பிள்ளை தொடக்கம் விளையாடின மாமரம், கிணற்றடி எல்லாத்தையும் விட்டுப்போட்டு எப்பிடி இருக்கப் போறன்?" என்று அவள் பலவாறாகச் சொல்லி புலம்பினாள். புறப்பட்டவுடன் சுலோசனாவின் அக்கா வீட்டிற்குத்தான் முதலில் வந்தார்கள். பிறகு இடைக்கிடை போய் வீட்டுச் சாமான்களைக் கொண்டுவந்து சேர்த்தாலும், அங்குபோய் குடியிருக்க முடியவில்லை. இப்பொழுது கொழும்பில் நம்மவர்கள் சொந்த வீடு வாங்கி வைத்திருப்பதுபோல் அக்கா வீடே பெருமையாகிப் போய்விட்டது சுலோசனாவிற்கு! வருங்காலங்களில் சுலோசனாவின் அக்காவும் வெளிநாடு போக வீட்டை முழுமையாக பொறுப்பேற்க வேண்டிவரும் என்றெல்லாம் சுலோசனா சொல்லிக் கொண்டிருந்தாள்.

"இப்ப ஏன் அழுகிறாயப்பா? இப்பதான் உன்ரை அக்கா வீட்டில இருக்கிறாய். அவவோட உயிரும் பிராணனுமாயிருந்து சந்தோசமாய்ச் சீவிக்கிறாய். பிறகென்ன பிரச்சினை" என்றான் அவன்.

" நீங்கள் என்னை நக்கலே அடிக்கிறீங்கள்?" அவள் கோபத்துடன் கேட்டாள்.

"இல்லையப்பா, நான் ஏன் கோவிக்க வேணும். இது உன்ரை அக்கா வீடு. நீ அவளோட சந்தோசமாய் இருக்கிறாய். வேற என்ன பிரச்சினைகள் வரப்போகுது."

சுலோசனாவின் முகத்தில் திருப்தி தெரியவில்லை. தன்னை அவன் கேலி செய்ததாக அவள் உணர்ந்திருக்க வேண்டும். "ஆரால் நாங்கள் இஞ்சை வந்து அகதியாய் இருக்கிறம் எண்டு தெரியுமே. நீங்கள் அதுகளைப் பற்றி எப்பவாது யோசிச்சனீங்களே. சும்மா இருக்கேலாமல் அவங்களோட சொறிஞ்சு சொறிஞ்சு எங்கடை நிம்மதியள் போனதுதான் மிச்சம். அதுகள் ஒண்டும் உங்களுக்கு தெரியாது. அக்கா வீட்டில இருக்கிறதுதான் பெரிய விசயமாய்ப் போச்சு."

அவனுக்குச் சட்டென்று சிரிப்பு வந்தது. "உன்ரை அக்கா நல்ல ஆள்தான். ஆனால் இஞ்சை குடியிருக்க வந்து இப்ப என்ன கொஞ்ச நாள்தானே ஆகுது. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். எல்லாம் உனக்கு விளங்கும். உன்ரை சொந்தக் காணியின்ரை பக்கத்துக் காணிக்காரன் கதியால் வெட்டேக்கை இலை குழை விழுந்ததிற்கே சண்டைக்கு போனனியப்பா நீ. அதெல்லாம் மறந்து போனியே? இன்னும் கொஞ்சக் காலம் பொறு. இரண்டு மாதமோ மூன்று மாதமோ போகட்டும். நீயாய் நாங்கள் வேற வீட்டை போவம் எண்டு சொல்ல வருவாய். அப்பதான் உனக்கு எல்லாமே விளங்கும். 'அப்பதான் அவங்களை இவங்கள் சொறியிற விசயமே விளங்கும்'" என்றான் அவன்.

## ஈழம்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

படப்பிடிப்புத் தொடக்க நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார். அதன் பிறகு அவருக்கும் அத் திரைப்படத்திற்கும் சம்பந்தம் இருந்ததாகத் தெரியவில்லை. தமிழகத்தைச் சேர்ந்த வேறு சிலர் அதில் பணியாற்றினர். அந்தத் திரைப்பட உருவாக்கத்தின் ஒளிப்படக் கலைசார் பணிகள், உத்தியோகபூர்வமாக என்னுடைய தாகவே இறுதிவரை இருந்தன. மிகவும் நெருக்கடியானபோர்ச் சூழல்களுக்கு மத்தியில் நடை பெற்ற ஒரு தீவிரமான முயற்சி அது.

நிதர்சனம் நிறுவனத்திற்கு, எழுதப்படாத இறுக்கமான 'தணிக்கை முறைகளும்' விடுதலைப் புலிகள் இயக்க நலன் சார்ந்த 'பிரத்தியேகத் தேவைகளும்' இருந்தன. ஆரோக்கியமான சினிமா முயற்சிகளில் ஈடுபடக் கூடிய கேசவராஜன், முல்லை யேசுதாசன் போன்ற சிலர், பல்வேறு நெருக்கடிகள் மற்றும் புறக்கணிப்புக்கள், போதாமைகள் மத்தியில் நீண்ட காலமாக அந்த நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றி வந்ததை அறிவேன். அத்தகைய சிலர் இப்போதும் இருக்கிறார்கள். சுதந்திரமாகவும், 'விடுதலைச் சிந்தனையுடனும்' ஈழ சினிமா சார்ந்த பிரக்ஞையுடனும் அத்தகையவர்களால் இனி இயங்க முடிந்தால், அந்த இயக்கமானது, ஈழ சினிமாவின் தொடர்ச்சிக்கான உந்துசக்தியாக அமையக் கூடும்.

நிதர்சனம் நிறுவனத்துடனான எனது உறவு நிலையானது, எப்போதும் சுமுகமானதாகவோ தொடர்ச்சியானதாகவோ இருந்ததில்லை. 'விமர்சனபூர்வமான' எனது அணுகுமுறை அதற்குக் காரணமாக இருக்கக் கூடும். பொதுவாக, விடுதலைப் புலிகள் சார்ந்த ஊடகவியல் நிறுவனங்களின் போதாமைகளுக்கு, 'உள் முரண்பாடுகள்', வசதியீனங்கள், கட்டுப்பாடுகள் அல்லது தணிக்கை முறைகள் போன்ற பல்வேறு காரணங்கள் இருந்தன. எது எப்படியிருந்தாலும் நிதர்சனம் நிறுவனத்தின் சமூக மற்றும் அரசியல் ரீதியான பங்களிப்புகள் குறைவானவையல்ல. ஈழ சினிமா சார்ந்த அதன் முயற்சிகள், ஆக்கபூர்வமான விமர்சன நோக்கில் (constructive criticism) அணுகப்பட வேண்டியவை. அவை, விரிவாகவும் உண்மைத் தன்மையோடும் ஆராயப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

## போர்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல காலமாக நீண்டு, பல அரசியல் பின்னணிகளால் முடக்கப்பட்டு, பல அதிகார துஷ்பிரயோகங்களால் தாமதிக்கப்பட்டு, இலங்கையில் நடைபெற்ற அதிகாரக் கைமாற்றத்தால் மீண்டும் கிளறி எடுக்கப்பட்டு, விசாரணைகளின் பின் வித்தியாவின் கொலைக் குற்றவாளிகளும், பாலியல் வன்முறையாளார்களும் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் குற்றறவாளிகளாக இனங்காணப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல ஜம்மு - காஷ்மீரிலும் முதலமைச்சரின் பணிப்புரையால் பொலிஸ் விசாரணை முடுக்கிவிடப்பட்டி ருக்கிறது. இஸ்லாமியர்கள் - உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் - பெண் உரிமைகள் ஆர்வலர்கள், இந்தக் கொடுமைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கின்றனர். சம்பவத்தைக் கேள்விப்பட்டவர்களும், காணொளியில் ஆஷிபாவைக் கண்டவர்களும் "ஓ" வென அழுது குரலெழுப்பி இருக்கின்றனர். காஷ்மீரிலுள்ள இந்துக்களுக்கு எதிரான கோஷமும் வலுவடைந்திருக்கிறது.

வித்தியாவானாலும் சரி, ஆஷிபாவானாலும் சரி இவ்வகையாக சிதைக்கப்படுவது ஒரு சாதாரண விடயமல்ல. அந்தக் கணத்தில் அவர்களால் உணரப்பட்ட வலிகள் மிகவும் கொடுமையானவை. கதறி அழுது அந்தக் கொடுமையிலிருந்து விடுபட - தப்பிக்க எத்தனித்த... அந்தக் கணத்தில்... உயிர் விரைவாகப் போய்விடாதா என்ற பிரார்த்தனையில் மனம் லயிக்க.. துடித்துத் துடித்துக் கதறி அழுது. பின் படிப்படியாக ஒய்ந்து... முனகலாக வெளிப்பட்ட வெப்பம் நிறைந்த அந்த ஜீவனற்ற மூச்சுக்களின் அடக்கத்தில்... அந்த மிருகங்களின் காமக் காற்றால் மேனி நுடங்கி... அழுகிய பிணத்தின் வாடையை ஒத்த வியர்வை நெடியினால் நிரம்பிய சுவாசப்பை கனத்து நின்ற கணங்களில்... கண்கள் செருக... கால்கள் சோர்ந்து நிற்க... பிணத்தின் மீதும் அவர்கள் காமக் க(ழி)ளிப்பு தொடர்ந்ததாகத்தானே செய்தி. சிறுபான்மையினத்தில் பிறந்துவிட்டோம் என்பதுதான்

இவர்கள் பிறப்பின் பாவமெனில்...?

ஆஷிபா, வித்தியாவும் என்ன செய்யலாம்?

## பதவி....

(06ஆம் பக்கம் பார்க்க)

அவர் தள்ளாடியபடியே அவரின் நண்பன் "புரூட்டஸ்" நோக்கிச் செல்கிறார். அவனும் அவரைக் கத்தியால் குத்துகிறான். அப்போ அவர், "ஓ...புரூட்டஸ்.... நீயுமா?" எனக்கேட்டு விட்டுக் கீழே விழுகிறார்.

இப்போ தமிழ் மக்கள் கேட்கும் கேள்வியும் அதுதான். "ஓ.... மாவை... நீயுமா?

பல உள்ளூராட்சி சபைகளில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் த.தே.கூட்டமைப்பு ஆட்சி யமைத்துள்ளது. பதவி வேட்டை யில் துரோகிகள் என வர்ணிக்கப் பட்டவர்களுடன் கைகோத்து கொள்கைகள் - கொலை செய்யப்பட்டு விட்டன.

இன்னொரு சாதனை வவுனியா நகர சபையில் இடம்பெற்றுள்ளது. மிகக் குறைந்த ஆசனங்களையே பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி ஐதே.கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகியவற்றுடன் இணைந்து ஆட்சியமைத்துள்ளது. த.தே. கூட்டமைப்பு ஈ.பி.டி.பியின் ஆதரவைப் பெற்று யாழ். மாநகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது தமிழர் விடுதலைக் கூட்டணி, த.தே. கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்து விட்டதாகக் குற்றஞ்சாட்டியது. அதே தமிழர் விடுதலைக் கூட்டணி வவுனியாவில் ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் அட்சியமைத்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில் த.தே. கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய மூன்று அமைப்புகளும் ஒன்றிணைய முடியாத பகைவர்களாகத் தோற்றமளிக்கின்றன. ஆனால், இவை மூன்றும் தனித்தனியே தேவைக்கேற்ப ஈ.பி.டி.பி., ஐ.தே. கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளுடன் எந்தவித கூச்சநாச்சமுமின்றி இணைந்து ஆட்சியமைத்துள்ளன.

இதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. இங்கு யாழ். மாநகரசபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் றொமிடியஸ் அவர்கள் கூறியதை நினைவு கூர்வது பொருத்தமாகும்.

"எம்மை போர்க் குற்றவாளிகளெனவும், ஒட்டுக்குழு எனவும் குற்றஞ்சாட்டிய த.தே. கூட்டமைப்பு தாங்கள் கூறியவை தவறு என்பதை ஒப்புக் கொண்டு எம்மைத் தமிழ் மக்களின் அரசியல் சக்தியாக ஏற்றுக்கொண்டுள்ளனர்".

அதாவது பதவி வேட்டையில் பலி கொள்ளப்பட்டது இதுவரை த.தே. கூட்டமைப்பாலும், தமிழர் விடுதலைக் கூட்டணியாலும் முன் வைக்கப்பட்ட கொள்கைகள் தான் என்பது மறுக்க முடியாத கொள்கையாகும்.

# ஆரிட்டைச் சொல்லி அழ?

**இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்**

## நல்லது இல்லாத ஒரு உலகம்?

மக்கள் சேவையை மகேசன் சேவை எண்டுதான் கேள்விப் பட்டனான். ஆனபடியாலைதான் மக்கள் ஒருவித பயபக்தியோடை அந்தச் சேவையைச் செய்தவை. அதை ஆன்மிகத்தின்ரை ஒரு அங்கமாகத்தான் மக்கள் பாத்தவை. அவ்வளவு பரிசுத்தமா இருந்த சேவையும் இப்ப வியாபாரமாப் போச்சுது. பதவிக்கு வந்த உடனை எப்பிடித் தங்கள் சேவையைச் சந்தைப் படுத்தலாம் எண்டதைப் பற்றிக் கவலைப்படத் துவங்கிவிட்டினம் உள்ளூராட்சித் தேர்த்தலிலை வெண்டவையள். சனத்தைக் கவர்றதுக்கு என்ன விளையாட்டைத் தாங்கள் செய்யலாம்? என்னத்தைப் பேசினால் சனம் கை தட்டும் எண்டதை அறிஞ்சு பேசுற ஒரு பேச்சாளன் மாதிரி, அவையளும் நடக்கத் துவங்கி விட்டினம்.

யாழ். மாநகர சபையிலை ஆட்சியைக் கைப்பற்றின ஆக்கள் உடனை என்ன செய்தவை தெரியுமே? அகிம்சை வீரன் திலீபன்ரை நினைவுத் தூபிக்கு முன்னாலை போய் வணங்கி ஒரு ஸ்ரண்ட் அடிச்சுக் கொண்டு அதைத் திருத்திப் புனருத்தாரணம் செய்யிறம் எண்டு ஒரு தீர்மானமும் எடுத்திருக்கினம். பிறகு பிரபாகரனுக்குச் சிலை, கிட்டுப்பூங்கா (சங்கிலியன் தோப்பு) கட்டிறது எண்டு தொடந்து பல தீர்மானம். உது கட்டாயம் வேணும். ஆனால் பாக்கேக்கை உதுக்குப் பின்னாலை ஒரு அரசியல் இருக்கே? அதுக்கு உவை என்ன சொல்லப் போயினம்?

அதுக்கை ஒரு குற்றச்சாட்டு மேயர்ஆனோல்ட் மேலை இருக்கு. போன வருசம் திலீபன்ரை நினைவு நாள் நடந்து கொண்டிருக்கேக்கை அதுக்குப் பக்கத்திலையே காப்புறுதி நிறுவனத்தின்ர நிகழ்ச்சி ஒண்டை பெரிய பொக்ஸ் எல்லாம் வைத்து சினிமாப் பாட்டுகளைப் போட்டுக் கொண்டாடினவர் எண்டதுதான் அவரிலை சனம் வைச்சிருக்கிற அந்தக் குற்றச்சாட்டு. அப்பிடி ஒரு தேசப்பற்றில்லாத மனுசன் ஏன் நினைவுத் தூபியடியிலை போய் கும்பிட்டவர். பிறகு வடிவா அந்த இடத்தைக் கட்ட வேணும் எண்டும் தீர்மானம் எடுத்தவர். நடந்து கொண்டிருக்கிற சில சம்பவங்களை நினைக்க அருவருப்பா இருக்குது.

வந்த உடனை நான் நினைச்சன் ஆஸ்பத்திரியைச் சுத்தி இருக்கிற கழிவு தண்ணிக் கானை எப்பிடித் திருத்தலாம் எண்டு மேயர் ஆலோசனை செய்வர் எண்டு. ஆனால் அவர் அதைச் செய்யேல்லை. நாறிப்போன பஸ் ஸ்ராண்டைச் சுத்தப்படுத்திறது எப்பிடி எண்டு சிந்திப்பரெண்டால் அதுகும் இல்லை. யாழ்ப்பாணம் சத்திரச் சந்தைப் பகுதியிலை கிடக்கிற வெத்திலைத் துப்பலைப் போய்ப் பாத்து ஏதேனும் செய்வர் எண்டால்? அதுகும் இல்லை. அதுக்கை யாழ்ப்பாணம் சீரிபி பஸ் ஸ்ராண்டிலை யாழ். மாநகராட்சிக்கும் சீரிபிக்கும் இடையிலை கிடக்கிற இழுபறியும் சனத்துக்கு ஆசுவாசத்தோடை பயணம் செய்யக் கட்டின பஸ் ஸ ராண்ட் இப்ப முழுக்க முழுக்க வியாபார இடமா மாறிப் போயிருக்கிறதைப் பாத்து ஏதாவது செய்வார் எண்டால் அதுகும் இல்லை. பஸ் ஸ்ராண்ட் பக்கமா மேயர் துரையப்பாவாலை கட்டிக் குடுத்த கடையள் எல்லாம் இப்ப சீத்துவக் கேடாக் கிடக்கு. அதுக்கை எல்லா வகை வியாபாரங்களும் நடக்குது. அதுக்கை பீ.எச்.ஐ. மாருக்கும் வேலை இருக்கு. மாநகரசபைக்கும் வேலை இருக்கு. பொலிஸூக்கும் வேலை இருக்கு. ஆனால் இப்ப அதை ஆர் பாக்கிறது எண்டது பிரச்சினைபோலை.

அடுத்ததா பழைய வெலிங்டன் தியேட்டருக்கு முன்னாலை இருக்கிற வண்ணான் குளம். நாறு நாறு எண்டு நாறி, நாற்பது ஐம்பது வருசத்துக்கு முன்னம் செத்த நாயின்ரை எலும்புக் கூடு கூட இன்னமும் மிதக்குதாம். பத்தை வளர்ந்துபோய் காடாய்க் கிடக்குது. அதுக்கு முன்னாலை மகிந்தா கோஷ்டியின்ரை ஆசீர்வாதத்தோடை கட்டின நகைக்கடை பேரியும் கிடக்குது. இதுக்கு இன்னமும் நகர சபை யின்ரை அங்கீகாரமும் கிட் டேல்லை எண்டும் கேள்வி. வாற தைப் பிறகு பாப்பம் எண்ட கோட்பாட்டிலை கட்டப்பட்ட தாம். உதுகும் தாடி ஐயாவின்ரை பரிபூரண ஆசீர்வாதத்தோடை தான் கட்டினவையாம். எல்லாம் அவனே என்று அவர் இருந்த காலத்திலை நடந்த சோகக்கதை அது.

மாநகரசபை எல்லைக்குள்ள இருக்கிற றோட்டுகள். ஒண்டும் நேர் சீராக இல்லை. குண்டும் குழியுமாக் கிடக்கிறதை மேயர் இன்னமும் பாக்கேல்லைப் போலை. அடுத்ததாத் தனியார் பஸ் தரிப்பிடப் பிரச்சினை. அவையின்ரை பஸ் எல்லாம் நிப்பாட்ட இடமில்லாமல் அந்தரிச்சுத் திரியிற பேயளைப் போலை பஸ் திரியிறதைப் பாத்தால் விசர்தான் வரும். அதோடை வயல் வெளியிலை மாடு திரிஞ்ச மாதிரி கட்டாக் காலி மாடுகள் யாழ்ப்பாண பஸ் ஸ்ராண்டடியிலை திரியிதுகள். அதிலை நிக்கிற



பொலிஸ்காரரிட்டைக் கேட்டால் மாட்டைக் கொன்ரோல் பண்ணத் தன்னட்டைச் சட்டம் இல்லை எண்டு கைவிரிக்கிறார். இப்ப கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தவும், நாயளைக் கட்டுப்படுத்தவும் ஆர் இருக்கினம். அது ஆரின்ரை பொறுப்பு?

மாநகரமும் அது சார்ந்த பிரதேசங்களும் மாநகராட்சிக்குக் கீழதானே இருக்குது எண்டபடியாலை அங்கை நடக்கிற எல்லா நன்மை தீமைக்கும் அவைதானே பொறுப்புக் கூற வேணும். இதுக்கை சங்கிலியன் தோப்புத் தொடர்பாக கன பிரச்சினையள். மந்திரிமனை இப்ப இருக்கிற கேவலம். அதுக்குள்ளை என்னென்ன நடக்குதோ தெரியாது. அதையும் மேயர் ஒருக்காப் பாக்க வேணும்.

மேயர் ஆனோல்ட் ஒண்டும் செய்ய வேண்டாம். ஒவ்வொரு நாளும் காலமை எழும்பி நடக்க வேணும். அது உடம்புக்கும் நல்லது. அவற்றை அரசியலுக்கும் நல்லது. ஒவ்வொரு பகுதியா யாழ்ப்பாண ரவுணைச் சுத்தி வரவேணும். அப்பதான் அவருக் குத் தெரியும் என்ன குறை நிறை யோடை யாழ்ப்பாண நகரம் கிடக்குதெண்டு. ஆனோல்ட்டுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. தான் நடந்து திரிஞ்ச இடத்தை, சைக்கிளில ஓடி ஆடித்திரிஞ்ச இடத்தை. நல்லதா ஆக்கிறதுக்கு. ஆனபடியாலை அந்தச் சந்தர்ப் பத்தை வடிவாப் பாவிச்சு மக்கள் சேவை எண்டதை மனசிலை முன்னுக்கு நிறுத்தி நல்ல திட்டங் களைச் செய்ய வேணும் எண்டது தான் எல்லாற்றையும் விருப்பம்.

பொது வாழ்க்கையிலை இவர் ஒரு பெருமனுசன் எண்டு சொல்ல ஒருதரும் இப்ப இல்லை. நல்ல மனுசருக்குத் தட்டுப்பாடு வந்து கொண்டிருக்குது. நல்லாக்களுக்குத் தட்டுப்பாடு வந்தால் சமூகத்துக்கு அது பெரிய நட்டம் எல்லோ? பொது வாழ்க்கையிலை கெட்ட ஆக்களின்ரை கை ஓங்கும். அப்ப நல்லதையும், உண்மையானதையும் அரிக்கன் லாம்பைப் பிடிச்சுத் தேட வேண்டி வரும். நினைக்கப் பெரும் பயமாக்கிடக்கு. நல்லது இல்லாத ஒரு உலகம். எண்டதைக் கேக்கவும் பயமாக்கிடக்கு. பாப்பம் என்னெண்டு? ●

## குரும்பட்டித் தேர்

இணைத்துக் குத்திய
குரும்பட்டிகள் இன்னும்
காயாமலே காத்திருக்கின்றன
நடந்து வந்த மனப் பாதை
மருங்குகளில்,

குத்திக் கோர்த்த
ஈர்க்கங் குச்சிகளின்
பிஞ்சுப் பாத ஞாபகங்களை
பசுமை மாறாமலே பாதுகாக்கின்றன
உதிர்த்த தென்னங் கீற்றுக்களின்
வரியோடிய வடுக்கள்.


அன்னை வயிற்றுப்பனிக்குடத்து
ஜீவநீருக்குப் பின் நீராடிச் சுவாசித்த
கோடிவேலி சங்குப் பூவும்
பூனை முடி வருடி தலைநுரைத்த
கிணற்றடிச் செவ்விரத்தையும்
எல்லாவிடியல்களிலும் என்
முதற் புன்னகையை மலர்த்திய
வாசற்கரைப் பொன்னரளியும்
கடவுளின் காலடியில்
உதிர்ந்து கொண்டே காத்திருக்கின்றன,

என்றும் மறக்கவொண்ணாத
ஆத்மாவைத் தீண்டிய
நாதஸ்வரத்தின் ஓசைக்காய் ஏங்கும்
வேலியோரப் பூவரசுகள்
ஒரு திருவிழாக் கனவின்
மயக்கத்தில் இன்னும்
துளிர்த்துக் கொண்டிருக்கின்றன.

சீனி மூடிவைத்த
அம்மாவின் லக்ஸ்பிறே பேணிகள்
கறல் அப்பி உக்கி
உதிரத் தொடங்கியபின்னும்
குப்பை மூடிய கோடிக் கிடங்கிற்குள்
சீவனின் கடைசி மூச்சை
இழுத்துப்பிடித்து கிழுவஞ்சுள்ளிக்கருகே
தவமிருக்கின்றன
ஒரு தாளம் தப்பாத காலத்து
தவிற்பாடலுக்காய்.

தேரை இழுத்து
தெருவில் விட்ட
நீயும் ,நானும் , அவர்களும்
இருப்பிடம் சேர்க்க
வந்துவிடுவோமென்ற
மாறாத நம்பிக்கையுடன்
காத்திருக்கும் அவற்றுக்கு.
நீயும், நானும், அவர்களும்
காலங்களைக் கல்லறைக்குள்
வைத்து விட்டுக் கடந்து
சென்று விட்ட
காலத்தின் கட்டாயச்சேதியை
அவற்றின் மொழியில் இனி
எப் பிஞ்சுக் குரலுரைக்கும் ?

– மாலினி



நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 24

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

பகலில் ஓய்வு கண்டிருந்த சண்டை மாலையில் மீண்டும் உக்கிரமடைந்தது. கிபிர் விமானங்கள் தங்கள் தாக்குதல்களை சின்னப் பண்டிவிரிச்சான் வரை விரிவித்தன. அங்குள்ள மக்கள் ஏற்கனவே மடுவுக்கு இடம்பெயர்ந்து விட்டதால் உயிராபத்துக்கள் தவிர்க்கப்பட்ட போதும் குடியிருப்புக்கள் நொறுங்கிக் கொண்டிருந்தன.

தம்பனையில் பட்டிமாடுகள் ஏற்கனவே கலைபட்டு பண்டிவிரிச்சான் வீதிகளில் தஞ்சமடைந்திருந்தன. அவையும் மெல்ல மெல்ல தட்சணாமருதமடு, பாலம்பிட்டி நோக்கி நகரத் தொடங்கிவிட்டன. நன்றாக இருட்டிய பின்பே சண்டை ஓய்வுக்கு வந்தது. ஆனால் படையினர் தாம் முன்னேறி நிலைகொண்ட இடத்திலிருந்து பின்வாங்கவில்லை. இரவு முழுவதுமே தொடர்ந்து பரா வெளிச்சங்களை அடித்துக் கொண்டிருந்தனர்.

அன்று மாலை சிறப்புத் தளபதி, பகுதி தளபதியிடம் ஒரு அணியை களமுனைக்கு அனுப்பும்படி கேட்டிருந்தார். சிவம் தலைமையிலான நாற்பது பேர் கொண்ட ஒரு அணியை அனுப்பிவைத்தார் பகுதித் தளபதி.

சிவம் குடாரப்பு தரையிறக்கத்தின்போது சிறப்புக் கட்டளைத் தளபதியின் தலைமையில் பல வீரதீரச் சண்டைகளைச் செய்தவன். அவரது தலைமையிலும் நெறிப்படுத்தலிலும் அவனுக்கு எல்லையற்ற மரியாதையும் விருப்பமும் உண்டு. மின்னல் வேகத்தில் முடிவெடுக்கும் அவரின் ஆற்றல் கண்டு அவன் பலமுறை அதிசயப்பட்டதுண்டு.

அவனைக் கண்டதும், "என்னடாப்பா.. இண்டைக்கு காட்டுக்கை கலக்க விட்டிட்டாய் போலை?.." என்றார் சிறப்புத் தளபதி ஒரு புன்னகையுடன்.

அவரின் வாயால் பாராட்டுப் பெறுவது சிவத்துக்கு எல்லையற்ற பெருமையாக இருந்தது, அவன் மெல்ல, "எல்லாம் உங்களோட நிக்கேக்க கிடைச்ச அனுபவம்தானண்ணை", என்றான்.

"அனுபவம் எல்லாருக்கும் தான் கிடைக்குது. அதை அறிவாய், மாற்றி அடுத்த கட்டத்துக்கு நகருறதுதான் கெட்டித்தனம். உனக்கு அது இருக்குது... இனி இந்தச் சண்டையிலையும் நீ அதை நிரூபிக்க வேணும்",

"சரியண்ணை", என்றான் சிவம் பெரும் மகிழ்ச்சியுடன்.

சிவத்தின் அணியினருக்கு ஒரு நீண்ட வரிசை கொடுக்கப்பட்டது. அதில் வலது பகுதி அணியும், இடது பகுதி அணியும் காட்டுக்குள் நிறுத்தப்பட, நடுப்பகுதி 50 மீற்றர் பின்தள்ளி நிறுத்தப்பட்டது. சிவம் நடுவில் நின்று அணியை வழிநடத்தும் படி கட்டளையிடப்பட்டது. களத்தின்



முன்முனையில் நின்ற அத்தனை போராளிகளும் பின்னுக்கு எடுக்கப்படவே இப்போ சிவத்தின் அணி களத்தின் முன்முனை வரிசையாகியது.

இரவு இடையிடையே படையினரின் 'ஷெல்கள்' விழுந்து கொண்டிருந்தன. துப்பாக்கிச் சூடுகளும் கேட்டுக் கொண்டிருந்தன. பரா வெளிச்சம் மட்டும் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. இரவு ஏற்கனவே போராளிகள் நின்று போரிட்ட பகுதிக்கும் சிவத்தின் நிலைகளுக்குமிடையே சில அசைவுகள் தெரிவது போன்று சிவத்துக்குப் பட்டது. ஆனால் பரா வெளிச்சம் வரும் நேரங்களில் பார்த்தபோது சிறு பற்றைகளை விட எதுவுமே தெரியவில்லை. எப்படியிருப்பினும் மேலிடத்தின் கட்டளை வரும் வரை எந்தத் தாக்குதலிலும் இறங்கக் கூடாது எனக் கண்டிப்பான உத்தரவு இருந்தபடியால் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. அதிகாலை மூன்று மணியளவில் படையினரின் 'ஷெல்' மாரி ஆரம்பமாகியது.

சிவத்தின் அணியினர் நிலை கொண்டிருந்த காப்பரண்கள் நிலமட்டத்தில் தேக்கம் குற்றிகள் போடப்பட்டவையாக இருந்தபடியால் எவ்வித சேதமும் ஏற்படவில்லை. மரக் கொப்புகள் மட்டும் முறிந்து பங்கர்களின் மேல் விழுந்தன. கிழக்கு வெளித்துக்கொண்டிருந்த அதிகாலைப் பொழுதில் ஷெல் மாரி ஓய்ந்தது. 'டாங்கிகள்' சகிதம் படையினர் முன்னேறும் அறிகுறிகள் தென்பட்டன. ஏற்கனவே போராளிகள் நிலை கொண்டிருந்து பின்வாங்கிவிட்ட காவல் நிலைகள் மீது சரமாரியாக 'ராங்க்' தாக்குதல்களும் துப்பாக்கி வேட்டுக்களும் பொழியப்பட்டன.

காவல் நிலைகள் மேல் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன. சுமார் ஒரு மணி நேரத் தாக்குதலின் பின்பு 'டாங்கிகள்' சகிதம் படையினர் முன்னேற ஆரம்பித்தனர்.

சிவத்துக்கு இன்னும் தாக்குதலுக்கான கட்டளை வராமல் இருப்பது தாங்க முடியாத தவிப்பாய் இருந்தது. எனினும் அடுத்தடுத்த நிமிடங்களில் கட்டளை வரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தான். இரு 'டாங்கிகளும்' அதன் பின்னால் காப்பெடுத்து ஓடிவந்த படையினரும் அவனின் கண்களில் தெரிந்தது. சுடுவதற்கு தயார் நிலையில் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

'டாங்கிகள்' சிவம் இருந்த இடத்தை நெருங்கிவிட்டன. படையினரும் சூட்டெல்லைக்குள் வந்து விட்டனர். இன்னும் ஏன் கட்டளை வர வில்லை எனத் தவித்துக் கொண்டிருந்தபோது படையினர் நின்ற இடங்களிலெல்லாம் நிலக் கண்ணிகள் வெடித்து அவர்கள் தூக்கி வீசப்பட்டது தெரிந்தது. முன்னால் வந்த 'டாங்கியின் செயின்' நிலக்கண்ணியில் அகப்பட்டு அறுந்து மேலெழுந்து கீழே விழுந்தது. போராளிகளின் எறிகணைகள் எங்கும் விழுந்து பெரும் புகைமண்டலத்தை எழுப்பின. பின்னால் வந்த 'டாங்கியின்' மேல் ஒரு எறிகணை விழுந்து சுடுகுழலைத் தூக்கி எறிந்தது.

படையினர் பலர் இறந்தும், காயப்பட்டும் விழுந்ததையும், ஏனையோர் நிலைகுலைந்து ஓடுவதையும் காண முடிந்தது. போராளிகளின் எறிகணை வீழ்ச்சி வரிசை மெல்ல மெல்ல முன்னகர ஆரம்பித்தது. திடீரென முன்னேறும்படி கட்டளை வந்தது. எறிகணை வீச்சு நின்றுவிடவே புகை மண்டலத்திற்குள்ளால் புகுந்து சிவத்தின் அணியினர் முன்னேற ஆரம்பித்தனர். அப்போதுதான் முன்னால் வந்த இராணுவ அணியை விட இன்னொன்று முன்வந்து கொண்டிருப்பதை சிவம் அறிந்து கொண்டான். சிவத்தின் அணி மிக நெருக்கமாக முன்னேறி அவர்கள் மேல் தாக்குதலைத் தொடுத்தது.

அதே வேளையில் போராளிகளின் எறிகணைகள் துல்லியமாகப் படையினர் நடுவே விழுந்து வெடித்தன. ஆனால் படையினரின் எறிகணைகளோ சிவத்தின் அணியினருக்குப் பின்புறமாகவே விழுந்து வெடித்தன. முற்பகல் பதினொரு மணியளவில் படையினர் பின்வாங்க ஆரம்பித்தனர். அதேநேரத்தில் தாக்குதலை மேலும் மூர்க்கமாக நடத்தும்படி சிவத்துக்கு கட்டளை வந்தது.

பிற்பகல் இரண்டு மணியளவில் தம்பனை முழுமையாகவே போராளிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. அப்போதுதான் தங்களைப்போல் மேலும் நான்கு அணிகள் சண்டையில் பங்கு கொண்டதை அறிந்து கொண்டான். காவலரண்களில் மட்டும் சில போராளிகளை நிறுத்திவிட்டு ஏனையோரை வெவ்வேறு பாதைகளால் காடுகளூடாகப் பின்வாங்கும்படி கட்டளை வந்தது. எல்லோரும் சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது கண்ணி வெடிப் பிரிவுப் பொறுப்பாளர் செல்வம் சிவத்தின் அருகில் வந்தான்.

"எப்பிடியண்ணை எங்கடை விளையாட்டு?" எனக் கேட்டான் அவன்.

"இண்டைக்கு வெற்றியே உங்களாலதானே... சண்டைக்குத் திட்டம் வகுக்கிறதிலை எங்கடை சிறப்புத் தளபதிக்கு நிகர் எவருமில்லை", என்றான் சிவம்.

"ஓமண்ணை.. எனக்கும் முதல் விளங்கேல்லை... கண்ணியை விதைச்சுப்போட்டு ஒரேயடியாய்ப் பின்வாங்கப் போறமோ எண்டுதான் நானும் யோசிச்சன்".

"நானும் சாடையாய் அசுமாத்தம் கண்டிட்டு ஆமியெண்டு நினைச்சு சுடத்தான் நினைச்சனான். அவர் தன்ரை ஓடர் இல்லாமல் தாக்குதல் நடத்தக்கூடாது எண்டு கண்டிப்பாய் கட்டளையிட்டதாலை தான் விட்டனான்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# ஈழம் சினிமா



## அனுபவம் - விமர்சனக் குறிப்புகள் சில...

■ அமரதாஸ்

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காட்சியூடகப் பிரிவாகிய நிதர்சனம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் இருந்து முக்கிய பங்காற்றியவர் ஞானரதன். (சச்சி) அவரது சினமா முயற்சிகள், 'ஈழம் சினமா' என்னும் கருத்தியல் (Ideology) மற்றும் நடைமுறைத் தளத்தின் ஆரோக்கியமான தொடக்கமாக அடையாளம் காணப்படக்கூடியதாக இருந்தன.

ஒரு காலத்தில், பாலுமகேந்திரா போன்ற கலைஞர்களுடன் அவர் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பும் இலக்கிய ஈடுபாடுகளும் அவரது ஈழ சினிமா முயற்சிகளுக்கு வலுச் சேர்த்திருக்கின்றன. ஆனால் அவரது முயற்சிகளுக்குப் போதிய வளங்களும், வரவேற்பும், ஊக்குவிப்பும் போதிய அளவு கிடைக்கவில்லை என்பது கசப்பான உண்மையாகும். அவரது மறைவுக்குப் பின்னரும் அவரது படைப்புகள் பெரிதாகக் 'கண்டுகொள்ளப்படவில்லை' என்றே கருதுகிறேன்.

அவரது 'முகங்கள்', 'காற்று வெளி' ஆகிய திரைப்படங்களும் 'நேற்று' போன்ற குறுந்திரைப் படங்களும் சில புனைவுசாராத் திரைப்படங்களும் ஆரோக்கியமான ஈழ சினிமா முயற்சிகளாக இனங்காணப்படக்கூடியவை. (கரும்புலிகள் தொடர்பான அவரது திரைப்படமொன்று, அநாவசியமான 'தலையீடுகளால்' சிதைவடைந்து போனது வேறு கதை.)

ஞானரதன் இப்போது இல்லை. அவருக்கு முன்னரே திரைப்பட முயற்சிகளில் ஈடுபட்டவர் கேசவராஜன். அவர் இப்போதும் இயங்கிக்கொண்டிருப்பவர். அந்த வகையில் ஈழ சினிமாவில் கேசவராஜனின் வகிபாகம் முக்கியமானது. ஞானரதனின் மறைவுக்குப் பின்னர், வன்னியில் வெளியாகிய 'வெளிச்சம்' இதழில், அவரைப் பற்றியும் அவருடனான எனது அனுபவங்கள் பற்றியுமான கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். அக்காலத்தில், கிளிநொச்சியில் 'அழகியல் கலா மன்றம்' இயங்கியது. அங்கு, ஞானரதன் இயக்கிய திரைப்படங்களை சுயாதீன முயற்சியில் காட்சிப்படுத்தி, ஈழ சினிமாவை ஆரோக்கியமாக முன்னெடுப்பது பற்றிய கலந்துரையாடலை நிகழ்த்தியிருக்கிறேன். அழகியல் கலா மன்ற அனுசரணையுடன், 'Wide Vision Studio' என்ற பெயரில் நான் சுயாதீனமாக உருவாக்கியிருந்த அமைப்பின் சார்பில் பல்வேறு உலகத் திரைப்படங்களையும் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருக்கிறேன்.

ஈழத்தில், குறிப்பாக வன்னியில் தமிழகக் கலைஞர்களும் ஈழக் கலைஞர்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து மேற்கொண்ட மிகப் பெரிய சினிமா முயற்சிகள் இரண்டு. ஒன்று 'ஆணிவேர்'. மற்றையது 'எல்லாளன்'. இரண்டிலும் எனது நேரடியான பங்களிப்புகள்




இருந்திருக்கின்றன. (நிறுவன ரீதியான அழைப்பின் நிமித்தம், அத்தகைய ஈழ சினிமா சார் 'செயல் திட்டங்களில்' பணியாற்றியிருக்கிறேன்.) 'ஆணிவேர்', 'எல்லாளன்' ஆகிய இரண்டுமே 'குறைப் பிரசவங்களாக' அல்லது குறைபாடுகளுடன் கூடிய முயற்சிகளாகப் போனமைக்குப் பல காரணங்கள் உள்ளன. இடையில் பல 'குளறுபடிகள்' நடந்திருக்கின்றன. அவை பற்றிப் பேசுவதால் இனிப் பெரிதாக எந்தப் பயனுமில்லை. ஆனால், ஈழ சினிமா முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் வகையிலே சில விடயங்கள் வரலாற்று உண்மைகளாக, விமர்சனபூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டியதும் பேசப்பட வேண்டியதும் அவசியங்களாகும்.

அந்த இரண்டு முயற்சிகளிலும் உள்வாங்கப்பட்டிருந்த தமிழகக் கலைஞர்களின் தெரிவிலும் அவர்கள் கையாளப்பட்ட முறையிலும் 'போதிய கவனம்' செலுத்தப்படவில்லை என்பது பிரதானமான குறைபாடாகும். நிதர்சனம் நிறுவனத்தின் பணியாளர்களாகவும் ஒப்பீட்டளவில் சாதகமான ஈழ சினிமா முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய நிலையிலும் இருந்த சிலர், சரியான முறையில் இனங்காணப்பட்டு போதிய கவனத்துடன் வளர்த்தெடுக்கப்படவில்லை. தமிழகக் கலைஞர்கள் தொடர்பான அணுகுமுறைகளில் அநாவசியமான 'மயக்கம்' மற்றும் அவர்களது ஆளுமைகள் தொடர்பிலான மிகைமதிப்பீடு போன்றவற்றால் அருகில் இருந்த ஆளுமையாளர்கள் போதிய மதிப்பீடுகளுடன் கையாளப்பட வில்லை. போராளிகள் மற்றும் பணியாளர்கள், கலைஞர்கள் மத்தியில் ஆளுமை பொருந்தியவர்களாக வளர்ந்து வந்தவர்கள் அதிகம் 'கவனிக்கப்பட வில்லை'.

நிறுவன ரீதியான பெரும்பாலான முயற்சிகள், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பரப்புரைத் தேவைகளுக்கானவையாகவே மேற்கொள்ளப்பட்டன. எனினும், தென்னிந்திய தமிழ் சினிமாவிற்கு மாற்றாகத் தனித்துவமான சினிமா முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்னும் அக்கறை, விடுதலைப் புலிகள் இயக்க மட்டத்தில் குறிப்பாக தலைவர் பிரபாகரனின் மனதில் இருந்தது. காட்சியூடகங்கள் சார்ந்த பிரிவுகளுக்காக, பெருமளவிலான பொருளாதார வளங்கள் பிரயோகிக்கப்பட்டன. (பல நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.) நிதர்சனம் நிறுவனமானது, சில காரணங்களால் இரண்டு பிரிவுகள் ஆனது. தொலைக்காட்சிப் பிரிவு ('தமிழீழ தேசியத் தொலைக்காட்சி') தனியாகவும் 'திரைப்பட உருவாக்கப் பிரிவு' தனியாகவும் இயக்கப்பட்டு, பல்வேறு 'செயல் திட்டங்கள்' முன்னெடுக்கப்பட்டன. அப்போது, ஏற்கெனவே இயங்கிவந்த திரைப்பட மொழிபெயர்ப்புப் பிரிவின் (ரதன் கலையகம்) பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன.

இன்னொரு பக்கமாக, இங்கிலாந்தைச் சேர்ந்த 'ஸ்கிரிப்ட் நெற்' என்ற நிறுவனத்தின் சுயாதீனமான சினிமாசார் 'கற்பித்தல்' முயற்சிகள், ஈழ சினிமா தளத்திற்கு வலுச்சேர்த்தன என்றே சொல்ல வேண்டும். 'ஸ்கிரிப்ட் நெற்' செயற்பாடுகளுக்கு, குறிப்பிட்ட அளவில் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணை வழங்கப்பட்டிருந்தது என்பது இவ்விடத்தில் பதிவுசெய்யப்பட வேண்டியது.

தங்கர் பச்சான், அறிவுமதி, பாரதிராஜா, புகழேந்தி தங்கராஜ், மணிவண்ணன், மகேந்திரன், சீமான் உட்படத் தமிழகத்தைச் சேர்ந்த சினமா சார் கலைஞர்கள் பலர், பல்வேறு நோக்கங்களுக்காக வன்னிக்கு அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள். (சினமா சாராத வேறு சிலரும் பல்வேறு நோக்கங்களுக்காக அழைத்துவரப்பட்டிருக்கிறார்கள்.) அவர்களில் பலரும், ஈழ சினிமா சார்ந்து 'போதிய விளக்கத்துடன்' அல்லது 'நியாயமான முறையில்' கையாளப்படவில்லை. அத்தகையவர்களுடனான தொடர்புகள், நியாயமான முறையில் தொடர்ச்சியாகப் பேணப்படவில்லை. ஆனால், ஒப்பீட்டளவில் நியாயமான முறையில் வன்னியில் பயன்பட்டவர் இயக்குநர் மகேந்திரன். போராளிகள் மற்றும் கலைஞர்கள் சிலருக்கு, சினிமா சார்ந்த 'பயிற்சிகளை' அவர் வழங்கியிருக்கிறார். 'நடிப்பு என்பது' என்ற நூலை, அங்கிருந்து தான் அவர் எழுதினார்.

சீமான், தனது வன்னிப் பயணத்தின் பெறுபேறுகளைத் தனக்கான 'சுயநல அரசியல்' சார்ந்து, 'கேலிக்குரிய' முறையில் பயன்படுத்தியிருக்கிறார் என்பது வருத்தத்திற்குரியதும் கண்டிக்கப்பட வேண்டியது மாகும். ஈழ விடயங்கள் சார்ந்த, மிகை புனைவுடனும் மிகையுணர்ச்சியுட னும் கூடிய அவரது 'பேச்சுக்கள்', 'உண்மைகளை' அறிந்தவர்கள் மத்தியில் எப்போதும் எள்ளலுக்குரியவையாகவே இருந்திருக்கின்றன.


சீமான், வன்னிக்கு வந்திருந்த போது சந்தித்திருக்கிறேன் அப்போது அவரது பிரதான அடையாளம் திரைப்பட இயக்குநர் என்பதாகவே இருந்தது. அப்போது 'நாம் தமிழர்' கட்சி இருக்கவில்லை. 'எல்லாளன்' திரைப்படத்தின்

(18ஆம் பக்கம் பார்க்க)

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 9

# துடிப்பான தலைவரும் வளம்பெறும் சபையும்

சேவை செய்ய வேண்டும் என்ற மனோபாவம் என்பது கற்று வருவதல்ல. தானாக இயல்பிலேயே வரவேண்டியதொன்று. அத்துடன் மரபு ரீதியாகப் பேணப்பட்டு வருவதையும் பாத்திருக்கிறோம். அதனால்தான் இன்றும் பல நம்பிக்கை நிதியங்களும், தொண்டு நிறுவனங்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒரு மனிதன் வாழ்வாங்கு வாழ வேண்டுமெனில் அவனுள் சேவை மனப்பாங்கும் இருக்க வேண்டும் என்பது திருக்குறள் தந்த விளக்கம்.




"அறம் செய்ய விரும்பு" என்ற ஆத்தி சூடியின் அறிவுரைக்கேற்ப சேவை என்ற விடயம் முதலில் மனதுள் கனவாகக் காண வேண்டியதொன்று. அப்படிப்பட்ட கனவு மெய்ப்படும்போது அது ஒரு ஆத்மார்த்தமான சேவையாக மிளிரும் என்பது எனது எண்ணம்.

இப்படிப்பட்ட குண இயல்பை அண்மைக்காலமாக இளைஞர்களிடையே பார்க்கும்போது மன நிறைவடைகிறது. அதுவும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டி இட்டு வெற்றி கண்ட பல இளைஞர்களுக்கு இயல்பிலேயே சேவை மனப்பாங்கு இருப்பதைக் காணும்போது ஊராட்சி சிறக்குமென்ற நம்பிக்கை பிறக்கிறது.

ஊராட்சி மன்றங்கள் தமது எல்லைக்கு உட்பட்ட சபை களை சிறப்புற ஆட்சி செய்து நிர்மாணிக்குமெனில் நாடு வளம் பெறும். அவர்கள் கொண்ட திட்டங்களும் சிறப்புற நடைமுறைப்படுத்தப்பட்டால் மக்கள் நலம்பெறுவர்.

உள்ளூராட்சி சபை இயங்காத கால கட்டத்தில் பல குளறுபடிகள் நடந்தன. அரச கட்டுப்பாடுள்ள அதிகாரிகள் கோலோச்சி இருந்ததால் அவர்கள் மக்கள் சேவையை மேம்படுத்தாத பல விடயங்களை அதிகார வரம்புக்குள் நின்று செயலாற்றினர். பல நடைபாதைக் கடைகள் அப்பப்போ தோன்றும். தரமற்ற பொருட்களை மலிவாக விற்கும் மையங்களாகச் செயற்படும்.

இது அனுமதிபெற்ற நிரந்தர வியாபார ஸ்தலங்களுக்கு பெரும் தலையிடியான விடயமாகவே இருந்திருக்கிறது. அத்துடன் போக்குவரத்துக்கும் இடைஞ்சலாகக் காணப்பட்டது. தற்போது பல உள்ளூராட்சி சபைகள் அதை நிறுத்த நடிவடிக்கை எடுத்திருப்பதாக அறிந்தோம். மிகவும் வரவேற்கத்தக்க விடயம். குறிப்பாக வலிகாமம் தெற்கு பிரதேச சபை தவிசாளர் தர்சன், அவரது சபையினர் மிகவும் அக்கறையோடு அணுகியிருக்கிறார்கள்.

இதேபோன்று மற்றும் பல உள்ளூராட்சிகளிலும் இம்முறை நடைமுறைப்படுத்தப்படுவதாகக் கேள்விப்பட்டோம். அடுத்ததாக வீதிச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்கின்ற பணிக்கு உள்ளூ ராட்சி சபைகள் ஒரு மாறுபட்ட ஏற்பாட்டைச் செய்யலாம். ஒவ்வொரு வீட்டிற்கும் முன்பாக இருக்கின்ற தெருப்பகுதியும் அந்த வீட்டு உரிமையாளர் தனது சொந்தப்பகுதி மாதிரியே கருதிச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக அவர்கள் தமது எல்லைக்குட்பட்ட மருதனார்மடம் பொதுச் சந்தையில் வரவேற்கத்தக்க - தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். விவசாயிகளுக்கான சந்தையாகவே அது இருக்க வேண்டும் என்பதில் அவர்கள் கவனம் திரும்பியிருக்கிறது. அத்துடன் சந்தையில் பழ வகைகளைச் செயற்கையாகப் பழுக்க வைக்க இரசாயனம் தெளிக்கப்படுவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்ததாக வட மாகாண சபை பலவிதமான முயற்சி எடுத்தும் ஒரு தோல்வி கண்ட விடயம். இந்திய இராணுவத்துடன் வந்த பார்த்தீனியம் என்ற பயிர் விஷம். இன்று பல வீடுகளுக்கு முன்பாகச் செழித்து வளர்ந்து கிடப்பதைக் காணலாம். வீட்டு உரிமையாளரோ அதை அண்டிய தோட்டக்காரரோ அதைக் கண்டு கொள்ளாமலே தமது வாழ்வைக் கழிக்கின்றனர். அதையும் அவர்கள் தமது கவனத்தில் எடுக்கப் போவதாகச் சொல்லி இருக்கின்றனர்.

அடுத்ததாக பொது மக்களுக்கு இன்னல் தரக்கூடிய கட்டாக் காலி மாடுகள், நாய்கள் தொடர்பாகவும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். தமது எல்லைக்குட்பட்ட மத ஸ்தாபனங்களில் மக்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடியதாக இருக்கும் ஒலிபெருக்கிப் பாவனைகளைக் கட்டுப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். அது போன்ற பல விடயங்களை அதாவது மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொல்லை தரக் கூடிய பல விடயங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் உள்ளூராட்சி சபைகள் ஒரு சமூகப் பணிக்கான முன்னுதாரணமாகத் திகழலாம்.


இதற்கிடையில் தவிசாளர் தர்சனைத் தொடர்பு கொண்டு அவரது எதிர்கால நடவடிக்கைகள் பற்றிக் கேட்டோம். பல திட்டங்களை திட்டமிட்டுள்ளார் எனச் சொன்னார். இப்படிப்பட்ட நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு உள்ளூ ராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்குமாயின் அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உந்து சக்தியாக புதுவிதி என்றும் இருக்கும் என்று எமது நல்லாதரவைத் தெரிவித்திருக்கிறோம்.

இதற்கிடையில் ஒரு உள்ளூ ராட்சியில் அண்மையில் நடைபெற்ற ஒரு நகைச்சுவைச் சம்பவத்தையும் சொல்லியாக வேண்டும். மொட்டைக் கறுப்பன் நெல்லுக்குப் பேர் போன ஒரு ஊராட்சியில் மூத்தவர் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் கடந்த புத்தாண்டுக்கு முதல் நாள் சபைக் காரியாலயத்துக்குப் போய் ஐயாயிரம் ரூபா கந்தோர் காசு இருக்கா என்று கேட்டிருக்கிறார். ஏன் ஐயா என்று கேட்டதற்குக் கைவிசேடம் கொடுப்பதற்கு எனப் பதிலளித்திருக்கிறார்.

அவர் சிந்தனை பரவாயில்லை. ஆனால் கந்தோர் காசு என்றது தான் இங்கே இடிக்கிறது? அத்துடன் அவருக்கெனக் கொடுக்கப்பட்டிருக்கும் உத்தியோகபூர்வ வண்டியில் கதவுக் கண்ணாடிகள் கறுப்பு பிலிம் ஒட்டப்பட்டுள்ளது. அதனுள் இருந்து வெளியே பார்க்கலாமேயொழிய அதனுள் இருப்பவரைப் பார்க்க முடியாது. இவரோ அந்த வண்டியினுள் ஏறி இருந்து போவோர் வருவோர்க்கெல்லாம் வடிவேலு பாணியில் கும்பிடு போடுகிறாராம். அவர் கும்பிடு போடுகிறதை வெளியே போவோர்க்கு அந்தக் கறுப்புக் கண்ணாடிக்குள்ளால் எப்படித் தெரியப் போகிறது? அவர்கள் காணாததுபோலத் தள்ளிப் போவதைப் பார்த்து இவர் திட்டுகிறாராம். எப்படி இருக்கிறது? இனிமேல் எமக்கு வடிவேலுவின் நகைச்சுவையைப் பார்க்க வேண்டாம். இது போல பல நடக்கின்றன - பார்த்து ரசிப்போம். ஆனால் இவற்றை நாம் முன்னுதாரணமாகக் கொள்ளக் கூடாது. என்ன?

சமூக மாற்றத்திற்கு முன்னுதாரணமானவர்களாக இருப்பவர்களைப் பற்றித் தெரிந்தால் புதுவிதி ஆசிரிய பீடத்துக்கு அறிவியுங்கள். அவர்களை வெளி உலகுக்குத் தெரியப்படுத்துவோம். வாழ்த்திப் பாராட்டுவோம்.






ஒரேயொரு கண்ணடிப்பில் அனைவரையும் கவர்ந்தவர் பிரியா வாரியார். இப்போது அவரின் இன்னொரு அசத்தலான கண்ணடிப்பு வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

சொக்லேட் விளம்பரம் ஒன்றுக்காகவே இந்த கண்ணடிப்பை நடத்தியிருக்கிறார். கிரிக்கெட் பின்னணியில் உருவான இந்த விளம்பரத்தில் இளைஞர் ஒருவரிடம் பேசும் பிரியா வாரியார் கண்ணடித்து அவரைக் கிறங்கடிப்பது படமாக்கப்பட்டுள்ளது.

ரும் சாதனை
அதன் நாயகன்
டத்தில் நடித்து
ளியாகவுள்ள
தலுங்கு,
து. இதன் ஹிந்தி
வனம் 120 கோடி
மலாகக் கொடுத்து
ல் படத்தின்
கோடிதானாம்.









முகமூடி படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. குடும்பப் பாங்காக நடித்தவர், திடீரென கவர்ச்சியாக நடிக்க ஆரம்பித்தார்.

அவரின் கவர்ச்சியை சிலர் நக்கலடிக்கவே நீச்சலுடையில் குளம் அருகே நிற்பதுபோல் படம் ஒன்றை வலைதளத்தில் பதிவிட்டார்.

“எல்லா பெண்களும் தங்களின் உடற்தோற்றத்தை ரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். சில சின்னபுத்திக்காரர் உங்களை கேலி செய்தால் அதை கண்டு கொள்ளாதீர்கள். புரட்சியாக நினையுங்கள்” என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

# நீரால் அலையும் ஐ.பி.எல்.



Indian Poor League Indian Premier League

‘உள்ளம் கொள்ளை போகுதே’ படத்தில் விவேக்கிற்கு தண்ணியில கண்டம் என்பதைப்போல இம்முறை ஐ.பி.எல். போட்டிகளுக்கும் தண்ணியாலேயே கண்டம் ஏற்பட்டுள்ளது. நீரின்றி அமையாது உலகு என்பார்கள். அதற்கமைய தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளின் மைதானத்தைத் தீர்மானிக்கும் தலையாய காரணியாகவும் மாறிவிட்டது தண்ணீர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதற்கு தமிழகத்தில் நடைபெற்று வரும் போராட்டங்களினால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சென்னையில் விளையாடவிருந்த ஏனைய 6 போட்டிகளையும் வேறு இடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டது. அந்தவகையில் ராஞ்சி, புனே, விசாகப்பட்டினம், திருவனந்தபுரம் ஆகிய 4 இடங்கள் பரிசீலனையில் இருந்து இறுதியில் புனேயில் போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் ‘மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாய்’ புனேயிலும் தண்ணீர் வடிவில் பிரச்சினை உருவெடுத்துள்ளது.

புனேயில் போட்டிகள் நடைபெறும் சமயத்தில் ஆடுகளத்தைப் பராமரிக்க நாளொன்றுக்கு 3 இலட்சத்து 35 ஆயிரம் லீற்றர் தண்ணீர் தேவைப்படுகின்றது. அந்தவகையில் சென்னையின் 6 போட்டிகளையும் நடத்தி முடிக்க 20 இலட்சம் லீற்றர் தண்ணீர் தேவைப்படுகின்றது. இதனால் ஐ.பி.எல். போட்டிகளை புனேயில் நடத்த எதிர்ப்புத் தெரிவித்து மகாராஷ்டிர அரசு, மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளது.

புனேயில் தண்ணீர்ப் பிரச்சினையால் ஐ.பி.எல். போட்டிகள் பாதிப்படைவது இது முதன்முறையல்ல. 2016 ஆம் ஆண்டு மகாராஷ்டிர விவசாயிகள் விவசாயம் செய்வதற்குப் போதிய தண்ணீரில்லாமல் இருக்கும் பொழுது ஐ.பி.எல். போட்டிகளை இங்கே நடத்தக்கூடாது என்று கோரிக்கை விடுத்து வேறு மாநிலத்திற்குப் போட்டிகளை மாற்றவேண்டுமென வலியுறுத்தி இருந்தனர். ஆனாலும் இறுதியில் சில உத்தரவாதங்களுக்கு மத்தியில் போட்டிகள் அங்கேயே நடைபெற்றிருந்தன. இந்நிலையில் தற்போது போட்டியை நடத்தக்கூடாது என்பதற்காக மகாராஷ்டிர மாநில அரசு கூறுகின்ற காரணம் ஏற்புடைய ஒன்றாகவே விளங்குகின்றது.

கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணி இம்முறை சொந்தமண்ணில் நடைபெறும் போட்டிகளுக்காக மொஹாலி மைதானத்தையும் இந்தூர் மைதானத்தையும் தெரிவு செய்ததைப்போல புனே மைதானத்தை எந்தவொரு அணியும் தமது சொந்த மைதானமாகத் தெரிவு செய்யவில்லை. அத்தோடு இம்முறை ஐ.பி.எல். போட்டிகளில் புனே அணி விளையாடவும் இல்லை. எனவே அங்கு போட்டிகளை நடத்த எந்த அவசியமும் இல்லை. அப்படி இருந்தும் பிளேஓவ் சுற்றுப்போட்டிகள் இரண்டை புனேயில் நடத்துவதற்கு அவர்கள் எவ்வாறு அனுமதி கொடுத்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

தர்க்க ரீதியாக புனேயில் சென்னை விளையாடவிருந்த ஆறு போட்டிகளை விட பிளேஓவ் சுற்றுக்களில் விளையாட இருந்த போட்டிகளின் எண்ணிக்கை குறைவென்றாலும் தண்ணீர்ப் பற்றாக்குறையான சூழலில் இரண்டு பிளேஓவ் சுற்றுப்போட்டிகளையும் அங்கு நடத்துவது அவசியம் தானா?

அதேசமயம் சென்னையில் போட்டிகளை நடத்த முடியாத சூழலில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் சொந்த மைதானமாக புனே விளங்கும் என ஐ.பி.எல்.நிர்வாகம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் மாநில அரசாங்கத்துடன் இது குறித்துப் பேச்சு நடத்தினார்களா? என்ற சந்தேகத்தையும் இது தோற்றுவித்துள்ளது.

ஏனென்றால் அவ்வாறு பேச்சு ஏதும் நடைபெற்றிருந்தால் அதன்போதே தண்ணீர் பிரச்சினை விவாதிக்கப்பட்டு புனே மைதானம் நிராகரிக்கப்பட்டிருக்கவும் கூடும். ஆனால் இந்த விடயத்தில் டோனியின் செல்வாக்கு நிறைந்த மைதானமாக புனே விளங்கியதனால் அதனையே சென்னை அணியின் சொந்த மைதானமாக்கி அதில் போட்டிகளை நடத்தி முடிக்க வேண்டுமென்ற முனைப்பு ஐ.பி.எல். நிர்வாகத்திடம் இருந்ததே தவிர சரியான அணுகுமுறையில் இந்தப் பிரச்சினையைக் கையாளவில்லை என்றே தோன்றுகிறது.

போட்டிகளின்போது எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு தான் என்றாலும் தண்ணீர் பிரச்சினையால் போட்டிகள் பாதிக்கப்படுவது ஐ.பி.எல்லில் தொடர்கதையாகி வருகின்றது. சென்னையின் போட்டிகளை வேறு இடங்களுக்கு உடனடியாக மாற்றுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் இம்முறை இந்த விடயத்தில் சிலவேளை சமரசம் ஏற்பட்டாலும் இனிவருங்காலங்களில் மைதான விடயத்தில் தூரநோக்கில் சிந்தித்துச் செயற்பட வேண்டியதன் அவசியத்தையே இது சுட்டி நிற்கிறது எனலாம்.

# முதலிடம்

கடந்த வாரம் உலக பட்மின்ரன் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட தரவரிசையின் பிரகாரம் இந்திய வீரரான ஸ்ரீகாந் முதலிடத்தைப் பிடித்துள்ளார். உத்தியோகபூர்வமான உலக பட்மின்ரன் ஆடவர் தரவரிசையில் இந்திய வீரர் ஒருவர் முதலிடம் பெறுவது இதுவே முதன்முறையாகும். முன்னதாக 1980ஆம் ஆண்டு இந்தியாவைச் சேர்ந்த படுகோன் என்ற வீரரும் முதலிடத்தைப் பிடித்தாலும் அது உத்தியோகபூர்வமற்ற தரவரிசைப்பட்டியலாகவே கருதப்பட்டது. ஆனால் ஸ்ரீகாந் தற்போது கணினி மயப்படுத்தப்பட்ட புதிய தரவரிசைப்பட்டியலின் பிரகாரமே முதலிடத்திற்கு வந்துள்ளார். மகளிர் பிரிவில் இந்தியாவின் சாய்னா நேவால் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலிடம் பிடித்ததற்குப் பிற்பாடு இந்திய வீரர் ஒருவர் முதலிடம் பெறுவது இதுவே முதன்முறையாகும்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த 25 வயதான ஸ்ரீகாந் கடந்தவருடம் இந்தோனேஷியா, அவுஸ்ரேலியா, டென்மார்க், பிரான்ஸ் நாடுகளில் நடைபெற்ற பட்மின்ரன் தொடர்களில் சம்பியன் பட்டம் வென்று தரவரிசையில் இரண்டாமிடத்திற்கு முன்னேறி இருந்தார். இதன்மூலம் இந்த நான்கு தொடர்களையும் ஒரே வருடத்தில் வென்ற முதல் இந்தியராகவும் உலகளவில் நான்காவது வீரராகவும் சாதனை படைத்திருந்தார். அப்போதே முதலிடத்தை விரைவில் பிடிப்பார் என்று தோன்றிய எதிர்பார்ப்பை தற்போது நிறைவேற்றியுள்ளார்.

இதுகுறித்து அவரது தந்தை கே.வி.எஸ். கிருஸ்ணா “ஸ்ரீகாந் பட்மின்ரன் போட்டிகளில் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தவேண்டுமென நான் ஒருபோதும் நினைத்ததில்லை. ஒரு சிறிய அரசாங்க உத்தியோகத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த விளையாட்டு உதவும் என்றதொரு காரணத்தினாலேயே அவரை விளையாட அனுமதித்திருந்தேன்” எனக் கூறியுள்ளார்.



# ஆனை விலை..! குதிரை விலை..!

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளின் ரிக்கெட் விலைகளைக் கேட்டால் ஒருகணம் தலைசுற்றுகிறது. சென்னையில் நடைபெறும் போட்டிகளுக்கான ரிக்கெட் விலை இந்திய ரூபாயில் 1,300 இருந்து 13,000 வரை விதிக்கப்பட்டிருந்தது. அதுபோல டெல்லி டேர்டெவில்ஸ் அணியின் உரிமையாளர்கள் டெல்லி டேர்டெவில்ஸ் அணி டெல்லியில் விளையாடும் போட்டிகளின் அதிகூடிய ரிக்கெட்டின் விலையை இந்திய ரூபாயில் 15,000 என நிர்ணயித்திருந்தனர். ஆனாலும் டோனி மற்றும் கோலியின் நட்சத்திர மதிப்பைக் கருத்திற் கொண்டு டெல்லியில் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் விளையாடும் போட்டிகளின் அதிகூடிய ரிக்கெட் விலையை இந்திய ரூபா 17,500 ஆக உயர்த்தி உள்ளனர்.

ஐ.பி.எல். போட்டிகளைப் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துச் செல்லும் நிலையில் அதனைச் சாதகமாகக் கொண்டு ரிக்கெட் விலைகளைத் தமது மனம் போன போக்கில் அணிகள் அதிகரிப்பது பல்வேறு தரப்பிலும் விசனத்தை ஏற்படுத்தி உள்ளது. ஐ.பி.எல். போட்டிகளில் சில விடயங்களில் அணி உரிமையாளர்கள் ஒருமித்த கருத்துநிலைக்கு வந்துள்ளபோதிலும் ரிக்கெட் விலைகளில் ஏகோபித்த ஒரு முடிவுக்கு வராமல் சர்வாதிகாரமாக நடந்து கொள்வது வியப்பை ஏற்படுத்துகின்றது.

ஏற்கனவே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையில் நடைபெற்ற முறைகேடுகள் காரணமாகவே சபை நிர்வாகம் கலைக்கப்பட்டு உச்ச நீதிமன்றம் நியமித்த ஒரு குழுவின் கீழ் செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஐ.பி.எல். போட்டிகளிலும் இவ்வாறான விரும்பத்தகாத செயல்கள் நடைபெறுவது ஆரோக்கியமாகத் தெரியவில்லை.



இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 21.04.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.